அணி - 01
ஒலி - 04

silampumagazine@gmail.com
+94 76 538 3995 / +94 76 258 3587

கார்த்திகை - 2020

# சிலம்பு

## பல்சுவை இணைய இதழ்

www.silampu.com
www.magazine.silampu.com







அறிவியல் - அரசியல் - ஆன்மீகம் - இலக்கியம் - சினிமா

சிலம்பு
பல்சுவை இணைய இதழ்

# உள்ளக் கமலமதை உணர்வுகளாய்ப் பரிசளிப்போம்...

உலகில் எந்த மூலையிலும் “காந்தள் மலர் மலர்ந்திருப்பதை காணும் போதெல்லாம் தமிழர்களின் உள்ளத்தில் கல்லறை மேனியர்களின் நினைவுகளும் கூடவே மலரும் என்பது தான் சித்தாந்த மாகிவிட்டதே? அறிவீர்களா?

உண்மை தான். எத்தனை தடைகள் இருந்தாலும் உள்ளத்தே எழுகின்ற சுடரை அணைக்க முடியுமா யாராலும்? இல்லவே இல்லை.

உண்மையான உணவர்வின் ஊற்றை, இறைப்பதன் மூலமாக கட்டுப்படுத்த முடியுமாக இருந்தால் 2009ஆம் ஆண்டு நிறைவு பெற்றபோதே எம் சந்ததியும் வரலாற்றை முடித்திருக்கும். இது உதிரத்தால் எழுதிய வரலாறு. நம் வரலாறு நடந்த சுவடுகளில் எத்தனையோ தீராத தாகதாரிகளின் உணர்வுடல்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதைகள் விருட்சங்களாக வளரவில்லையே தவிர, நாம் தளராத துணிவோடு வாழ வேர்களாக மாறியிருக்கின்றன. உறங்கு நிலையில் இருக்கின்ற விதைகளின் உயிர்ப்பு தனக்கான காலத்தில் நிகழ்வதை போல என்றேனும் ஒரு நாள் தர்ம வாஞ்சையும் நிறைவேறும்.

அந்தக்கனவோடு உறங்குகின்றனர் நம் உறவுகள். அத்தகைய உறவுகளுக்காக நாம் போராடவில்லை என்றால் நம்மை காலம் பழிக்கும். தீர்வு கிடைக்கலாம் கிடைக்காமல் போகலாம் ஆனால் இந்த ஆண்டும் நாம் அந்த நாளுக் காக தவம் இருந்தோம் என்கின்ற பதிவு இன்றியமையாதது.

மடிந்தவர்கள் வாழ்ந்து முடித்தவர்கள் அல்லர். தற்போதய இளைஞர்களுக்கு தங்கள் ஆயுளை, ஆருயிரை பரிசளித்து சென்றார்கள்.

தம் சந்ததி நிமிர்ந்து “ஏறுபோல் பீறு நடை போட” தம் கனவுகளை, தம் குடும்பத்தின் பாசங்களை துறந்தவர்கள். அவர்களின் மேலான நம் உணர்வை சிதைக்க யாராலும் முடியாது.

அதேபோல் அவர்களின் உறவுகளைக் காக்க எமை விட்டால் யாரும் முன்வரவும் மாட்டார்கள் என்பதையும் உணர்ந்து கொள்வோம்.



இது புனித காலம்,
புனிதர்களை நினைவேந்தும் புண்ணிய காலம்

பல புண்ணிய காரியங்களை அவர்கள் நினைவால்
நிகழ்த்தும் காலம் என்பதையும் மறவாதீர்கள்

“வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது”

அன்புடன்
இதழாசிரியர்

www.magazine.silampu.com
www.silampu.com

# கார்த்திகை விளக்கீடு





**ப.கிருத்தியா**
- தென்கிழக்கு பல்கலைக்கழகம்

பண்டைத்தமிழன் வழிபட்ட மும்மூர்த்திகள் ஞாயிறு, திங்கள், நெருப்பு. இவற்றில் நெருப்பை ஒளிவடிவமாக விளக்கில் ஏற்றக் கற்றுக்கொண் டான். இதிலிருந்து தான் மனிதன் நாகரிகப் பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்தான். இரு கற்களை உரோஞ்சி உருவாக்கிய நெருப்பை மரக்கட்டைகளை பயன்படுத்தி எரித்து விளக்காக பயன்படுத்தியவன் அறிவு முதிரவே கற்குழிகளிலும், கிளிஞ்சல்களிலும் எண்ணெய் ஊற்றி திரியிட்டு விளக்கேற்றினான்.



தீப வழிபாட்டுக்கு சாதி, சமய பேதம் எதுவும் இல்லை. அனைத்து மானிடர்களுமே வணங்கு கின்றார்கள். விளக்கேற்ற உகந்த மாதம் கார்த்திகை. கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் விளக் கேற்றும் வழக்கம் உண்டு. ஆயினும் கார்த்திகை மாத பௌர்ணமி நாளும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்த திருக்கார்த்திகை நாளே சிறப்பு.

இந் நாள் இல்லங்களிலும் ஆலயங்களிலும் மிக பிரகாசமான தீபங்களை ஏற்றி மகிழ்ச்சியாக கொண்டாடும் ஒரு தீபத்திருநாள்.

கார்த்திகை திங்கள் உதிர்கால முடிவாக நிற் கிறது. அடைமழையினால் கதிர் ஒளி காணாமல் வாடி ஒடுங்கியிருந்தமக்கள் தங்கள் வாட்டத்தை நீக் கிக் கொள்ள மலை மீது விளக்கிட்டு மகிழ்வர். இத் தினத்தில் சொக்கப்பானை கொளுத்துவர். ஆலயத் தின் முன் புறத்தே வாழை மரம் நட்டு அதனை பனை ஓலைகளால் சுற்றி அடைத்து உருவாக்குவர். அதற்கு தீயிட்டு இறைவனை சோதிவடிவமாக காட் சியளிக்க செய்து வணங்குவர். திருவெண்ணா மலை சிவன் ஆலயத்தில் இது வெகுவிமர்சையாக நடை பெறும். திருவண்ணாமலை உச்சியிலே வெள்ளைக் கொடித்துணியை நிறைய நெய் கூற்றி வைத்து பஞ்சமூர்த்திகளையும் எழுந்தருளச்செய்து அக்கினியிடுவர். இவ் விளக்கை கண்டு தொழுத பின் னரே உணவு உண்பது விதிமுறையாகும். இந்நாளில் கொழுக்கட்டை, பொரி உருண்டை பிரசாதம் சிறப்பா னது.

சொர்க்கத்திலுள்ள அரக்கர்களை எரித்த பாவ னையே சொக்கபானை என்பர். இந் நன்நாளில் ஜோதி வடிவான இறைவனை விதிப்படி பூஜித்தால் நாமும் ஜனன, மரண துன்பமகன்று பேரின்பம் பெறலாம்.

முந்நாளில் பிரம்மனும், விஷ்ணுவும் தானே பெரியவன் என்று வாதாடி பலவருடங்கள் போரிட் டனர். சிவபெருமான் சோதிப்பிழம்பாக தோன்றி னார். அப்போது அசரீரி கேட்டது. இருவரும் அடி முடி தேடி காணமுடியாமல் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்டனர். இதுவே கார்த்திகை திருநாளின் ஐதீகக் கதையாகும்.

முருகன் ஆலயங்களில் குமராலய தீபமும், விஷ்ணுவாலய தீபம் விஷ்ணு ஆலயங்களிலும், சர்வாலய தீபம் அனைத்து இந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும் விளக்கில் இறை வனை இருத்தி வழிபடும் முறையே இதுவாகும். விளக்கு என்பது இருளை விலக்கி பொருள்களை விளக்குவதால் ஏற்பட்ட காரணப்பெயர்.

ஒளியானது இறைவனைப் போல் எங்கும் நிறைந்தது. ஒளி இல்லையேல் உயிர்கள் அனைத் துக்கும் உணவு இல்லை. காரணம் தாவரங் களில் உணவுற்பத்திக்கு ஒளி மிக முக்கியம். ஒளி இல்லையேல் மழை இல்லை. நீரானது ஆவி யாகி ஒடுங்கியே மழையாகப் பொழிகின்றது. ஆகவே இப்படி அனைத்திற்கும் முதலாக இருக்கும் ஒளியை வணங்கி வளம் பெறுவோம்.

www.magazine.silampu.com
www.silampu.com

# பனையின் கொடைகள் ஒரே பார்வையில்

குருத்து ஓலை (Tender Leaves)
- கைப்பணிப் பொருட்கள் (Handicrafts)
- விளையாட்டுப் பொருட்கள் - (Toys)

முற்றிய ஓலை - (Matured Leaves) - பொதி செய்யும் பொருட்கள் (Packaging Materials)
- கூரை வேய்தல் - Roofing Material
- வேலி அடைத்தல் - Fencing
- உரம் - Fertilizer
- கால்நடை உணவு - Animal Feed



ஈர்க்கு (Eakles) -
- கட்டும் பொருட்கள் - Tieing Material
- கைப்பணிப் பொருட்கள் - Handicrafts
- சுளகு. இடியப்பத்தட்டு - Winnower, Stringhoppr plates
- உரம் - Fertilizer

காவோலை – (Dried Leaves) - வேலி, உரம், விறகு – Firewood

Unfermented Sap (Sweet Sap)
நொதிப்படையாத பனஞ்சாறு - (பதநீர்)

- போத்தலில் அடைக்கப்பட்ட பதநீர் (Bottled Sweet Sap)
- பனம் பாணி ( Treacle )
- பனங்கட்டி (Jaggery)
- பனங்கற்கண்டு / கல்லாகாரம் (Sugar Candy)
- பனஞ்சீனி (Palm Sugar)
- கழிவுப்பாகு (Molasses)

Fermented Sap (Toddy)
நொதிப்படைந்த பனஞ்சாறு (பனங்கள்)

- மதுசாரம் (Arrack)
- குறைந்த செறிவுள்ள மதுசாரம் (Wine)
- வினாகிரி (Vinegar)
- Spirit



மரம் (Timber) -
- கூரைமரம் - Roofing
- விறகு - Fire Wood
- Toy, தளபாடம் - Furniture
- ஜன்னல் - Window, கதவு - Door

மட்டை - (Stalk)-
- நார் - Fiber / (Palm Coir)
- வேலி அடைத்தல் - Fencing
- கட்டும் பொருள் (கயிறு) - Coir Rope
- தும்பு (Fibre) - தூரிகை Brushes, மெத்தை Mattress, விளையாட்டுப் பொருள் Toys



வேர் - Root

Seed (விதை) -
- பூரான் - Edible Embryo (Pooran)
- செயலூக்கமிக்க கரி - Activated Carbon
- விறகு - Firewood, Toys



- வடலி - Young Palm
- நுங்கு - Young Fruit (Nungu) / Ice Apple
- பனம்பழம் - Palmyrah Fruit
  - பதப்படுத்தப்பட்ட பனங்களி - Palmyrah preserved pulp
  - பனாட்டு - Palmyrah pulp leather ( sundried pulp)
  - கோடியல் (Cordial), பனம்பானம் (Palmta), ஜாம் (Jam)
  - ஜெலி (Jelly), மில்க் ஷேக் (Milk shake), பெக்ரின் (Pectin)
  - பற்பசை (Tooth paste), Soap (சவர்க்காரம்), Face Wash



கிழங்கு (Tuber)
- ஒடியல் (Unboiled Tuber), ஒடியல்மா - கூழ் (Porridge)/Khool, பிட்டு (Pittu)
- புழுக்கொடியல் (Boiled tuber), புழுக்கொடியல் மா - கேக் (Cake)
  - பாம்போஷா (Palm posa)
  - நூடில்ஸ் (Noodles)
  - பிஸ்கெட், குக்கிஸ் (Biscuit , Cookies)
- சீவல் புழுக்கொடியல் (Boiled tuber chips)



செல்வி சுகன்யா துரைசிங்கம்
BSc Spl (Hons) (WUSL), MSc(PGIA)

www.magazine.silampu.com
www.silampu.com

# பண்டிகைகளும் போசாக்கும்



செல்வி **யாழினி சண்முகநாதன்**
BSc Spl (Hons) (WUSL),
போசணையியல். MSc(India)

பண்டிகைக் காலம் என்றாலே சிறார்களுக்கு கொண்டாட்டம் தான். இந்தப் பண்டிகைகளை அலங்கரிக்கும் பாரம்பரியங்களில் ஒன்றானதும் சிறார்களுக்கு மிகவும் பிடித்தமானதும் எது என்றால்...? அது பலகாரங்கள் தான்.

**பயிற்றம் உருண்டை, முறுக்கு, சிப்பி, லட்டு, மோதகம், கொழுக்கட்டை, வடை, பொங்கல் போன்றன, சிறார்களின் உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் தேவையான மாப்பொருள், புரதம், கொழுப்பு என்பவற்றை வழங்குவதோடு உடலில் நடைபெறும் இரசாயன மாற்றங்களை அனுகூலமான அல்லது நன்மையான முறையில் நடத்திச் செல்ல உதவும். “Bio Active Compounds” என்பவற்றை வழங்குகின்றன.**



இந்தக் கட்டுரை பண்டிகைக்கால பலகாரங்களை பற்றிய ஒரு சிறு கதையாகும்.

எங்கள் பாட்டி காலத்தில் பண்டிகை காலம் என்றாலே தனி ஆனந்தம். படிப்பு, வேலை என்று தொலை தூரம் சென்ற எல்லோரும் விடுமுறையைக் கழிக்க பாட்டி வீட்டிற்கு வந்திருப்போம். பாட்டி எங்களுக்காக பயிற்றம் உருண்டை, முறுக்கு, சிப்பி, லட்டு போன்ற பலகாரங்களை செய்து வாளியில் போட்டு வைத்திருப்பார். பண்டிகை தினத்தன்று மோதகம், கொழுக்கட்டை, வடை, பொங் கல் போன்றவற்றை செய்து பரிமாறுவார்.

காலங்கள் உருண்டோட வாழ்க்கை முறையும் மாறிக்கொண்டது. இப்பொழுதெல்லாம் யார் அந்தப் பலகாரங்களை செய்ய நேரம் ஒதுக்குவது? கடைகளில் கிடைக்கும் சிற்றூண்டிகளான கேக், மிக்சர், பற்றீஸ், றோல்ஸ், குலாப்-ஜாம், கலர் லட்டு என்பவற்றை பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு பண்டிகையை சிறியளவில் கொண்டாடிக்கொள்கின்றோம்.

**பாட்டி வீட்டில் சுத்தமாகவும் அன்புடனும் தயாரித்த பலகாரங்கள் சிறார்களுக்கு இரட்டிப்பான சந்தோசத்தையும் ஆரோக்கியத்தையும் வழங்குகின்றன.**

இந்த இடத்தில் கதையை நிறுத்தி ஒரு நிமிடம் சிந்திப்போம். பாட்டி செய்த பலகாரங்களின் பிரதான உள்ளீடுகளாக அரிசி மா, அரிசி, கடலைமா, உழுந்து, உழுத்தம் பருப்பு, பயறு, பயற்றமா, தேங்காய்ப்பால், சக்கரை என்பவற்றுடன் ஏலக்காய், இஞ்சி, மஞ்சள், பெருங்காயம், கராம்பு, கடுகு, மிளகு போன்றவையும் அடங்கியிருந்தன.

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com



இவை சிறார்களின் உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் தேவையான மாப் பொருள், புரதம், கொழுப்பு என்பவற்றை வழங்குவதோடு உடலில் நடைபெறும் இரசாயன மாற்றங்களை அனுகூலமான அல்லது நன்மையான முறையில் நடத் திச் செல்ல உதவும். **"Bio Active Compounds"** என்பவற்றை வழங்கு கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக பாட்டி வீட்டில் சுத்தமாகவும் அன்புடனும் தயா ரித்த பலகாரங்கள் சிறார்களுக்கு இரட்டிப் பான சந்தோசத்தையும் ஆரோக்கியத்தையும் வழங்குகின்றன.

இப்போது தற்கால பண்டிகை சிற றுண்டிகளின் உள்ளீடுகளை பார்த்தால் அதில் அதிகளவு கோதுமை மா, தேங்காய் எண் ணெய், சீனி போன்றவையே காணப்படு கின்றன.

இவற்றை சிறார்கள் அதிகள வில் உண்ணும் போது மேலதிக மாப்பொ ருள் மற்றும் கொழுப்பு உடலில் சேர்ந்து




உடற் பருமனை அதிகரிக்கும். சிறுவயதி லேயே பருமனான உடலை கொண்டிருப்பது, தொற்றா நோய்களான நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், உயர் குருதி கொலஸ்ரோல் போன்றவற்றை இளமைக் காலத்திலேயே உருவாக்கிவிடும்.

எனவே எம் சிறார்களின் எதிர்காலத் தினை கருத்தில்கொண்டு இந்தப் பண்டிகைக் காலத்தில் ஆரோக்கியமான பலகாரங்களை செய்து அனைவருடனும் பகிர்ந்து உண் போம்.

www.silampu.com

# அரிசி உமியில் படிகமற்ற சிலிக்கா






படிகமற்ற சிலிக்கா ஒரு கனிமப் பொருளாகும். ஆமோபஸ் சிலிக்கா **(Amorphous Silica)** என்பதே இதன் ஆங்கிலப் பதமாகும் இரசாயனவியலில் இதனை படிக மற்ற சிலிக்கன் டை ஒக்சைட்டு என அழைப்பர். பூமியில் இக்கனியம் ஆனது இயற்கையாகவும், மனிதனால் செயற்கையாகவும் உருவாகலாம்.

இவ் படிகமற்ற சிலிக்காவானது இலங்கையில் பல்வேறு உற்பத்தி தொழில் துறைகளிற்கு பயன்படுத்தப்படுகிறது. பிரதான மாக ரயர் உற்பத்தியில் ரயரினை ஒருவலுப்படுத்தும் ஒரு மூலப்பொருளாகவும், கொங்கிறீற் கலவையினைத் தயாரிக்கவும், மேலும் இது

உக்கக் கூடிய பல்படிமப் **(Polymer)** பொருட்களை உற்பத்தி செய்யும் போது அற்றின் தாங்கும் தன்மையை அதிகரிக்கவும், கடதாசி மற்றும் அழகு சாதனப்பொருட்களில் ஒரு சேர்வையாகவும், சுவர் வண்ணப்பூச் சுக்களில் ஊக்கியாகவும், அதிக மின்கடத்தா வலிமை காரணமாக குறை கடத்தி இலத்திரனியல் சுற்றுக்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

படிகமற்ற சிலிக்காவினை இலங்கை அரசாங்கம், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தே உள்நாடு மற்றும் வெளிநாட்டு பொருளாதாரத்திற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்கிறது.


படிகமற்ற சிலிக்காவினை இலங்கையிலேயே பெற்றுக்கொள்ள ஒரு வழி உண்டு.

இலங்கையின் பிரதான பொருளாதாரமான விவசாயத்துறையில் நெல் வேளாண்மையானது முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு ஒரு வருடத்திற்கு 1.5 - 3 மில்லியன் மெட்ரிக் தொன்கள் அளவிலான நெல் உற்பத்தி செய்யப்படுகிறது என புள்ளிவிபரவியல் கூறுகிறது.




www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com




நெல்லிலிருந்து அரிசியினைத் திரித்து உமியினை இடைவிளைவுப் பொருளாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். இலங்கையில் இவ் அரிசி உமியானது பிரதானமாக எரிபொருளாகவும்இயற்கை உரமாகவும் மற்றும் கட்டுமானப்பொருட்களில் ஒரு சேர்வையாகவும் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் இவற்றிற்காக பயன்படுத்தப்படும் உமியின் அளவானது உமி உற்பத்தி அளவினை விட மிகவும் குறைவான அளவேயாகும். பெரும்பாலும் அவை சுற்றுப்புறச் சூழலில் ஆங்காங்கே வீசியும் எரித்தும் வீணடிக்கப்படுகின்றன.

இவ்வாறு வீணடிக்கப்படும் உமியில் படிகமற்ற சிலிக்காவானது செறிந்து காணப்படுகிறது. **200 kg** உமியினை வளியில் எரிப்பதன் மூலம் **50 kg** சாம்பலினைப் பெற்றுக் கொள்ள முடியும். உமியின் சாம்பலில் **60 - 80%** படிகமற்ற சிலிக்கா காணப்படுவதனால் இவ் **50 kg** உமி சாம்பலில் இருந்து சுமார் **40 kg** படிகமற்ற சிலிக்காவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

படிகமற்ற சிலிக்காவானது உமியிலிருந்து பல்வேறு வழிமுறைகளில் உற்பத்தி செய்ய முடியும். அவற்றுள் வெப்பச்சிதைவு **(Thermal Decomposition)** மற்றும் வீழ்படிவு **(Precipitation)** முறைகள் மிகவும் எளிமையானதும் மற்றும் செலவீனம் குறைந்த முறைகளாகும். வேப்பச் சிதைவு முறையானது இரசாயன மற்ற முறையாகும்

இதற்கு மூடு உலை இயந்திரம் **(Muffle Furnace)** இருந்தால் மட்டும் போதுமானது. வீழ்படிவு முறைக்கு எரிசோடா (சோடியம் ஐதரொக்சைட்டு) மற்றும் சல்பூரிக் அமிலம் எனும் இரசாயனங்களும் இதற்காக வடிவமைக்கப்பட்ட இயந்திரமும் போதுமானது.

எனவே, படிகமற்ற சிலிக்காவினை உற்பத்தி செய்யத் தேவையான மூலவளம் நிறைந்த நாடாக நம்நாடு காணப்படுகிறது. இந்தியா மற்றும் பிற நாடுகள், இதனை உற்பத்தி செய்வதற்கான தனி ஆலை இயந்திரங்களை பயன்படுத்துகின்றனர்.

நம் நாட்டின் வளங்களை வீணடிப்பதை விடுத்து, நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவினைப் பயன்படுத்தி வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக புதிய தொழில் முயற்சியாளர்கள் முன்வருவார்களாயின் பெருமைக்குரிய விடயம். மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு படியாகும்.

திருமதி. **கிருஷாந்தி அருண்ராஜ்**
B.Tech Science & Technology (Hons) in Materials Science & Technology Uva Wellassa University

www.silampu.com

# அழகுக்கலை
## ஒரு கண்ணோட்டம்



பொதுவாக பெண்களும் ஆண்களும் உடலா ரோக்கியத்தை பேணும் வண்ணம் தமது இயற்கை யான தோற்றத்தை மெருகேற்றி அதைநேரம் தமது ஆளுமையை வளர்த்துக்கொள்ளவே அழ குக்கலை அவசியம் என்றே சாதாரணமாக நாங் கள் கருதுகின்றோம்.





இன்றைய பெண்கள் இயற்கையானதும், செயற்கை யானதுமான முறைகளிலும் தமது உடல் அழகை பேணிப்பாதுகாக்கிறார்கள். அந்தவகையில் அழகுக் கலை என்பது இருக்கிற அழகை நாம் மேலும் எப்படி மெருகூட்டுவது என்பது தான். அந்தவகை யில் பெண்கள் என்பவர்கள் இயற்கையாகவே அழகானவர்கள். ஒவ்வொரு பெண்களிலும் ஒவ் வொரு அழகு அல்லது ஒவ்வொரு விடயம் அழகாக இருக்கும். அதனை அழகுக்கலை நிபுணராகிய நாம் இனம் கண்டு அதனை மேலும் மெருகூட்டி அழகாக்



கிக் கொள்கின்றோம்.

அழகுக்கலை பற்றிய விளக்கத்தினை பார்க்கும் போது ஒவ்வொரு நாடுகளிலும் கற்பிக்க படும் முறையும், பாவனை முறையும் வேறுபடுகிறது. ஏனெனில் வெவ்வேறு நாடுகளில் உள்ள சீதோஷ்ண காலநிலை மற்றும் அவர்களின் கலாச்சார வேறுபாடு கள் அடிப்படையில் இது அமைகிறது. அதேநேம் அழகுக் கலையின் கருப்பொருளானது எல்லா நாடு களிலும் பொதுவானதாகவே காணப்படுகிறது.

அழகுக் கலையின் அடிப்படைக் கல்வியை சரியான முறையில் கற்று அத்தோடு சிறந்த அனுபவத்தை பெறுவதன் மூலம் இத்துறையில் ஒரு வெற்றிகரமான இலக்கை அடையலாம் என்பதில் சந்தேகமில்லை.



அழகுக்கலை கற்கை நெறியை கற்பதன் மூலம் தமது மேனியழகை மெருகேற்றுவதுடன் மட்டுமல்லா மல் இதனை ஒரு சுய தொழிலாகவும் ஆற்றலாம். அதே நேரம் பகுதி நேரத்தொழிலாக செய்வதன் மூலம் சிறந்த ஒரு மேலதிக வருமானத்தை பெண் கள் வீட்டிலிருந்தபடியே ஈட்டிக்கொள்ளலாம்.

தொழில் ரீதியாக இக் கல்வியை கற்கும் பொழுது இதில் ஏற்படும் புதிய மாற்றங்கள், உபகரணங்கள் நவநாகரிகம் பற்றிய அறிவு மற்றும் வாடிக்கை யாளர்களுக்கு வழங்கும் சேவையின் முக்கியத்துவம் அவர்களின் திருப்தி என்பவற்றை ஒரு அழகுக்கலை நிபுணர் தனது அன்றாட நடைமுறைகளில் முறைப்

www.magazine.silampu.com
www.silampu.com


திருமதி.கயல்விழி றமேஸ்குமார்
(B.A) Higher Diploma in Hair & Beauty
மயில் அழகுக்கலை நிலையம்

படி ஈடுபடத்தவறினால் உடல் ரீதியாக பாதிப்படையலாம். நமது உணவு ஊட்டச்சத்து நிறைந்ததாக இருப்பதுடன் உடற்பயிற்சிக்கு மற்றும் சரும பராமரிப்பு போன்றவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

அத்துடன் அழகுடன் ஆரோக்கியமும் சேர்ந்ததுதான் உண்மையான அழகு. அது மட்டுமல்லாமல் அழகும் ஆரோக்கியமும் அவரவர் மனம் சார்ந்த விடயங்கள். அழகாக காட்சியளிப்பது என்பது தன்னம்பிக்கையையும் தரக்கூடியது. ஆழகாக இருப்பவர்களை விட தம்மை அழகாக வெளிப்படுத்திக்கொள்ளத் தெரிந்தவர்களே பிறரது கவனம் ஈர்க்கிறார்கள். அந்த அடிப்படையை கற்றுத் தருவதுதான் அழகுக்கலை.

முன்பு அழகுக்கலை நிலையம் என்பது வெறும் ஆடம்பரமாகவும் வசதியானவர் மட்டும் செய்யும் இடமாகவுமே கருதப்பட்டது. அது மட்டுமல்லாமல் சில பெண்கள் விருப்பம் இருந்தாலும் தயங்குவார்கள். அதற்கு பெரும்பான்மையாக வீட்டிலுள்ளவர்களும் அதற்கு ஒத்துழைக்கமாட்டார்கள். ஆனால் இப்பொழுது அதற்கு மாறாக காலம் மாறிவிட்டது. அதாவது மனைவியை கணவனும், மகளை தாயோ அல்லது தந்தையோ அழகு நிலையத்திற்கு கூட்டிவருவதை கண்கூடாக பார்க்கமுடிகிறது.

அத்துடன் மேக்கப் செய்து கொள்வதும், பியூட்டி பார்லர் போவதும் ஆடம்பரமான விடயம் என்பது மாறி தினசரி கடமைகளில் அதுவும் ஒன்றாகிவிட்டது. இது சந்தோசமான மாற்றமே. அது மட்டுமல்லாமல் இத்துறையில் இன்று எந்தப்பிரச்சினைக்கும் தீர்வு உள்ளது. புது புது சிகிச்சைகள், பயிற்சிகள் இருக்கிறது. அதனை நாம் ஒரு முறையான அழகுக்கலை நிபுணரிடம் இருந்து பெற்று எந்தவயதினரும் அழகாகவும் இளமையாகவும் இருக்க முடியும் என்பது ஆணித்தரமான உண்மை.



www.magazine.silampu.com
www.silampu.com

# சுடர் ஏற்ற துடிக்கும் உள்ளங்கள் துயர்துடைக்க பின் நிற்பதேன்?



ஸ்ரீ.திவியன்

உண்மையில், காலம் ஈழத்தமிழர்களை வஞ்சிக்கிறது என்பதில் எவ்வித மாற்றுக்கரு-த்தும் இல்லை. இலங்கை என்னும் ஜனநாயக நாட்டில் சில ஆட்சிகள் "பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாஸ்திரங்கள்" எனும் பாரதி அவர்களின் கவி வரிகளை நினைவூட்டுவதா கவே அமைகிறது. சுதேச பூமியில் உரிமை மறுக் கப்பட்ட இனம் போராட்டம் ஒன்றுக்கு தலைப் பட்டு பின்னர் அந் நாட்டின் அரசால் தடை செய்யப்பட்ட போராட்டமாக ஆக்கப்பட்டு குறித்த போராட்டம் பல நாட்டு அரசுகளின் கூட்டால் பலமிழக்க செய்யப்பட்டமை உல கறிந்த விடயம். ஆயினும் அதில் பிரதி பலன் பாராது ஆகுதியான மறவர்களை ஒட்டு மொத்தமாக நினைவுகூருகின்ற "காந்தளின் மாதத்தில்" இன்றைக்கு நினைவுகூர முடி யாத சூழமைவு வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போன்று ரணமானது.

**நினைவுகளை மீட்கும் உரிமையை துறப்பது உசித மானது அல்ல. அதேபோல உரி மைக்காக உயிர் நீத்தவர் களின் குடும்பங்களின் வாழ்வின் மீட்சிமையும் இன்றியமையாத தொன்று என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.**



www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

இதே தேசத்தில் ஜே.வி.பி என்னும் அமைப் பால் புரட்சியாளர்களின் நினைவேந் தல்களுக்குத் தடையில்லை. அந்த அமைப் பின் புரட்சி போராட்டங்களும் அரசினால் தடை செய்யப்பட்டதே. ஆனால் கேட்பாரற்ற அநாதைகளாக்கப்பட்ட தமிழினத்தின் மாவீ ரர் நினைவேந்தலை தடை செய்வதில் ஒரு பகுதியினர் உன்னிப்பாக கவனித்து வருகின் றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களிலெல்லாம் இராணுவ காவலரண்களை அமைத்து பயம் காட்டி வருகின்றனர். " கொவிட் - 19" தொற்றும் ஒரு காரணம் என்பதில் தான் இத் தடையை வலுப்படுத்துவதில் இவர்களின் ஆர்வம் நகைப்பிற்குரியதாகிறது. கொவிட் - 19 தொற்றின் உச்சகட்டத்தில் தான் நாட்டின் பாராளுமன்ற தேர்தல் நிகழ்ந்தேறியது. ஆதன் பின்னரான பல கூட்டங்களும் நடந் தன என்பதும் கண்கூடு. ஆனால் மாவீரர் நினைவேந்தலில் வெளியார் யாரும் பங்கு பெறப் போவதில்லை. இருந்தும் கொவிட் - 19 தொற்றிவிடும் எனக் காரணம் காட்டுவது என்பது, எப்படியேனும் அவ்விடயம் நடக்காது செய்வதற்கு அரசும், பக்கவாத்தியங்களும் அரும்பாடுபடுவதனை தெளிவூட்டுகிறது.



அப்படியெனில் கொவிட் - 19 இல்லாது போனால் நினைவேந்தல் சாத்தியப்படுமா? இது மில்லியன் ரூபாய்க்கான வினா அல்ல. எந்தச் சந்தர்ப்பத்திலும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காது. ஏதோ, விளக்கேற்றினோம் என்று திருப்திப்படுகின்றளவில் நமது அரசி யலாளர்கள் செயற்பட்டு அமைதியடைவார் கள்.

**உள்ளே உறங்குகின்ற விதைகளின் வேதனை யார் அறிவார்?**

இந்த விதைகள் தங்களிலிருந்து பரந்த விருட்சங்கள் உருவாகும். அவ் விருட்சங் களின் நிழலில், அரவணைப்பில் சந்ததியினர் தளைப்பர் என்றல்லவா கனவு கண்டனர். ஆனால் இன்றைய நிலைப்பாடோ, அவ் விதையானவர்களின் குடும்பங்கள் அநாதர வாய் உடை, உணவு, உறையுள் போன்ற

**இதை சொல்லப்போனால் சொல்பவர்களுக்கும் சுடரை ஏற்றத் தடுப்பவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்பாரும் உண்டு. ஆனாலும் சொல்லாது போனால் எம்மை நம்பி, எமக்காக ஆகுதியானவர் களின் பால் நமது சிந்தனையை செலுத்தாத பாவிகளாவோம் என்பதில் ஐயமில்லை.**




www.silampu.com

அத்தியாவசிய தேவைகளுக்காக அல்லாடுகின்ற சூழலில் இருக்கின்றார்கள் என்பதனை அறியாதார் யாருமிலர் ஆயினும் நாம் நவம்பர் 21 முதல் 27 வரையான காலப்பகுதியிலேயே அவ் வீடுகளுக்கு சென்று அவர்களோடு நினைவுகளை பகிர்கின்றோம். விளக்குகளை ஏற்றுகின்றோம். காலக்கொடுமையடா கரிகாலா! இவர்களை இப்படியே வைத்திருந்தால்தான் யுத்தச் சுவடுகள் அழியாது என்பது பல போலி உணர்வாளர்களின் உதிரத்தோடு ஊறிய எண்ணம்.




**சற்றே கவனியுங்கள்!**

இன்றைக்கும் தகரக்கொட்டில்களிலும், தற்காலிக வீடுகளிலும் தம் வாழ்க்கையை தொலைத்து மீளாது தவிக்கின்ற மாவீரர் குடும்பங்களை சிந்தியுங்கள். போருக்கு போன தன் பிள்ளை திரும்பி வராது பேரர்களை ஒப்பேற்ற தவியாய் தவிக்கும் பாட்டன் பாட்டிகளை எண்ணிப்பாருங்கள். ஒரே குடும்பத்தில் தான் பெற்ற அத்தனை குழந்தைகளும் உரிமைப்போர் என்ற தீயில் கருக்கிய பெற்றோரின் நெஞ்சத்தை பிளந்து பாருங்கள். அங்கே சுயநலம் இல்லை. தனக்காக அவர்கள் வாழப்பழகவில்லை. தன் மகனால் இந்த சந்ததி மிளிரும் என்று பொது நலம் கொண்டவர்களின் வாழ்வாதாரம் வெறும் சுடரை ஏற்றுவதனால் மிளிர்ந்துவிடுமா?

இதை சொல்லப்போனால் சொல்பவர்களுக்கும் சுடரை ஏற்றத் தடுப்பவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்பாரும் உண்டு. ஆனாலும் சொல்லாது போனால் எம்மை நம்பி, எமக்காக ஆகுதியானவர்களின் பால் நமது சிந்தனையை செலுத்தாத பாவிகளாவோம் என்பதில் ஐயமில்லை.

நினைவுகளை மீட்கும் உரிமையை துறப்பது உசிதமானது அல்ல. அதேபோல உரிமைக்காக உயிர் நீத்தவர்களின் குடும்பங்களின் வாழ்வின் மீட்சிமையும் இன்றியமையாததொன்று என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

உறங்குகின்ற உறவுகள் களமாடியது தமக்காக அல்ல. தம் குடும்ப நலனை மட்டும் நினைந்தல்ல.

தனதுகுடும்பத்தைமட்டும்நினைத்திருந்தால் ஒரு வியாபாரியாகவோ, அரசியல் பக்கவாத்தியமாகவோ, வெளிநாட்டு ஆசாமியாகவோ, அல்லது அரச உத்தியோகத்தராகவோ ஆகியிருக்கலாம். தனது குடும்பத்தை பணவளத்தால் உயர்த்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் சிந்தித்ததெல்லாம் எம் எல்லோரையும் பற்றியே. ஆனால் அவர்களின் குடும்பங்களைப்பற்றி சிந்திக்கின்ற சந்தர்ப்பத்தையே உருவாக்காத செய்நன்றிகொண்ட மக்கள் எம்மை யெண்ணி வித்துடல்களை விட்டுப்பிரிந்த ஆன்மாக்கள் வேதனை அடையும் என்பதே பிரபஞ்ச உண்மை.

**மாவீரர் குடும்பங்களின் வாழ்விலும் ஒளியேற்ற தலைப்படுவோம்.**

**செய்நன்றி எண்ணி வாழ்வோம்.**

'வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்
மாபெரும் வீரர் மானம் காப்போர்
சரித்திரம் தனிலே நிற்கின்றார்'



பாடல் : அச்சம் என்பது மடமையடா
படம்: மன்னாதி மன்னன்
பாடலாசிரியர் : கண்ணதாசன்

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம்

தொடர் 03

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

# யார் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள்?



தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் ஆரம்பத்தில் மட்டக்களப்பில் நடைபெற்றாலும் இறுதி சந்திப்புக்களும் முடிவுகளும் கொழும்பில் எடுக்கப்பட்டது.

நான்கு கட்சிகளையும் அழைத்து பேசுவதற்காக கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ( சுரேஷ் அணி) ஆகிய கட்சிகளின் தலைவர்கள் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திலேயே நான்கு கட்சிகளுக்கிடையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது, தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள், பற்றி ஆராயப்பட்டது.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள், தாயகக்கோட்பாடு, விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் வலியுறுத்தியது.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகள், தாயகக்கோட்பாடு என்பனவற்றை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ந்துக் கொண்டாலும் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என சிலர் வாதிட்டனர். இதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவராக இருந்த ஆனந்தசங்கரி முக்கியமானவர். விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் யார், அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதி கள் இல்லையா என்ற கேள்வியை எழுப்பினார். அவர் இன்றுவரை அக்கொள்கையிலிருந்து மாறவில்லை.

விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதற்கு ரெலோ தலைவர் என்.சிறிகாந்தாவும் எதிர்ப்பு தெரிவித்தார்.

நான்கு கட்சிகளும் இணைந்து ஒரு கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதா அல்லது நான்கு கட்சிகளும் கூட்டாக இயங்குவதென ஒப்பந்தம் செய்து



www.silampu.com



அதனை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பதா என்ற விவாதமும் இடம்பெற்றது.

1976ல் தமிழ் கட்சிகள் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி என்ற புதிய கட்சியை ஸ்தாபித்து அதனை ஒரு கட்சியாக பதிவு செய்ததால் அக்கட்சியில் ஏற்கனவே இருந்த தமிழரசுக்கட்சி உட்பட ஏனைய கட்சிகள் செயலிழந்து போயின.

அதுபோல புதிய கட்சி ஒன்று உருவாக்கப் பட்டால் இதில் இணையும் கட்சிகள் எதிர் காலத்தில் செயலி ழந்து மறைந்து போய் விடும். ஒவ்வொரு கட்சிக்கும் உறுப்பினர்கள் தொண்டர்கள் இருப்பார்கள். எனவே நான்கு கட்சிகளும் தங்கள் தங்கள் கட்சிகளின் தனித்துவங்களை பேணி அக் கட்சிகளை தொடர்ந்து நடத்தலாம். தேர்தல் உட்பட பொது விடயங்களில் ஒன்றாக செயல்படலாம் என்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டது. தனியான ஒரு கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில்லை என்றும் நான்கு கட்சிகளின் கூட்டாக இயங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இறுதியில் நான்கு கட்சிகளும் ஒப்பந்தம் செய்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பது என முடிவாகியது. ஆனால் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் உறுதியாக இருந்தது. ஏனைய கட்சிகள் அதனை எதிர்த்து வந்தன. இது பெரும் பிரச்சினையாக காணப்பட்டது.

இந்த பிரச்சினைக்கு மாற்று யோசனை ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர்.சம்பந்தன் முன்வைத்தார்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த கூட்டத்தை தொடர்ந்து தொடர்ச்சியாக கொள்ளுப்பிட்டியில் உள்ள தொழிலதிபர் எஸ்.வடிவேற்கரசன் அவர்களின் வீட்டில் சந்திப்புக்கள் நடைபெற்றன.

விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியும், அவ்வாறு கூறிப்பிட தேவையில்லை என ஏனைய கட்சிகளும் முரண்பட்டுக் கொண்டிருந்தன.

இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக வடிவேற்கரசனின் வீட்டிற்கும் குமார் பொன்னம்பலத்தின் வீட்டிற்கும் தான் மாறி மாறி ஓடித்திரிந்ததாக அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் செயலாளர் நல்லையா குமரகுருபரன் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இறுதியாக விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என குறிப்பிடாவிட்டாலும் தமிழ் மக்களின் முக்கிய அரசியல் அமைப்பு என குறிப்பிடலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர். சம்பந்தன் ஆலோசனை கூறினார்.

www.magazine.silampu.com
www.silampu.com



இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு 2001ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயம் சேர்க்கப்படவில்லை (ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 2004ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயம் சேர்க்கப்பட்டிருந்தது.)

ஒரு வாரகாலமாக கொழும்பில் நடந்த சந்திப்புக்கள் பேச்சுவார்த்தைகளை அடுத்து 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி சனிக்கிழமை நான்கு தமிழ் கட்சிகளுக்கிடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கொள்ளுப்பிட்டியில் உள்ள தொழிலதிபர் எஸ்.வடிவேற்கரசன் அவர்களின் வீட்டில் செய்து கொள்ளப் பட்டது.

நான்கு கட்சிகளும் இணைந்து ஒரே கொள்கையின் அடிப்படையில் செயல்படுவது என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதென்றும், நான்கு கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பாக செயல்படுவது என எடுக்கப்பட்ட முடிவையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தேர்தல் ஆணையாளருக்கு நான்கு கட்சி செயலாளர்களும் இணைந்து அறிவிப்பதென அந்த ஒப்பந்தத்தில் குறிப் பிடப்பட்டிருந்தது.

ஒரே கொள்கையின் கீழ் செயல்படும் அதே வேளை தங்கள் தங்கள் கட்சிகளின் தனித்துவங்களையும் தொடர்ந்து பேணுவது என்றும் இக்கட்சிகள் இணங்கி கொண்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆர்.சம்பந்தன், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் செயலாளர் ந.குமர குருபரன், ரெலோ கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் எஸ்.வடிவேற்கரசன், கந்தையா நீலகண்டன் உட்பட கொழும்பு தமிழ் பிரமுகவர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

நான்கு கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னம் தமது பொது சின்னமாக இருக்கும் என்றும் தேர்தல் ஆணையாளருக்கு இந்நான்கு கட்சிகளின் செயலாளர்களும் கூட்டாக அறிவித்திருந்தன.



*மார்கழி - 2020 இதழில் தொடரும்*
*- அநாமதேயன்*

www.magazine.silampu.com
www.silampu.com

# இலங்கையின் பொருளாதாரத்தில் கொவிட் 19 இன் தாக்க விளைவுகள்




இலங்கை இந்திய உப கண்டத்திற்கருகில் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள 65610 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உடைய ஒரு சிறிய தீவாகும். இத்தீவின் மக்கள் தொகை மத்திய வங்கியின் அறிக்கையின்படி 21.8 மில்லியன் ஆகும். இந்தத் தீவானது இதன் கேந்திர அமைவிடம் காரணமாகவும் இங்கு காணப்பட்ட யானைத்தந்தம், முத்து, இரத்தினக் கற்கள் காரணமாகவும் கேந்திர அமைவிடம் காரணமாகவும் ஆரம்பகாலம் முதலே பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததன் விளைவாகவே நாட்டினை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என மேலைநாட்டவர்கள் தங்களின் குடியேற்ற நாடாக வைத்திருந்தனர்.

இதனால் தேயிலை, கறுவா, இறப்பர் போன்றன பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மாற்றம் பெற்றது. பின்னர் இத் தீவானது 1945ல் சுதந்திரத்தைப் பெற்றது. சிறிதுகாலம் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையை பின்பற்றினாலும் 1956ல் ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கம் மூடிய பொருளாதார முறையை கைக் கொண்டது. அதாவது தேவைகள் அனைத்தையும் உள்ளூர் உற்பத்தியினை கொண்டு மாத்திரமே பூர்த்தி செய்யவேண்டிய நிலையாகும். இது சிறந்த ஒரு முறையாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுப்பவையாக இருந்தாலும் இதன் இறுக்கமான போக்கு மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதன் விளைவாக அடுத்த தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசிய கட்சியினரால் இந்த முறைக்கு மாற்றீடாக திறந்த பொருளாதார முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் உலக நாடுகளுடன் இலங்கை பொருளாதார உறவுகளை பேண வழிவகுத்தது. அந்த வகையில் இலங்கை தேயிலை, சுற்றுலாத்துறை, மத்திய கிழக்கு நாடுகளிலான வேலைவாய்ப்பு, கட்டட நிர்மானத்துறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலம் வருவாயை பெற்றுக்கொள்ளும் நாடாக திகழ்கிறது.

## உலகளாவியரீதியில் கொவிட் 19

2019ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் முதன் முதலாக சீனாவின் ஊகான் மாநிலத்தில் ஒருவித வைரஸ் பரவுவதாகவும் இது மனிதனுக்கு ஆபத்தினை விளைவிப்பவை என செய்திகள் பரவ 2020ம் ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் உலகளாவிய ரீதியில் பரவி உலகளாவிய தொற்று நோயாக அதனை பிரகடனப்படுத்துவதற்கு உலக சுகா தார அமைப்பின் நிர்ப்பந்தித்தது. இந்த

www.magazine.silampu.com
www.silampu.com



உலகளாவிய கொவிட் 19 வைரஸ் தொற்றானது இன்று வரை அனைத்து நாடுகளிலும் மனிதாபிமானம் மற்றும் பொருளாதாரம் இரண்டின் பாதிப்புகள் முன்னர் எதிர்பாராத சுவடொன்றினை விட்டுச் சென்றுள்ளது. நவம்பர் மாதத்தின் நடுப்பகுதி வரை உலகளாவிய ரீதியில் 52.3 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டதோடு 1.29 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளனர். உலக வல்லரசான அமெரிக்காவில் 10.5 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டதோடு எமது அண்டை நாடான இந்தியாவில் 8.68 மில்லியன் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கையில் கொவிட் - 19 பரவல்

சீனாவிலிருந்து சுற்றுலாவிற்காக நாட்டுக்கு வருகை தந்த பெண்மணிக்கு 2020 மார்ச் 11ல் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன் பின்னர் ஐம்பது நோயாளராக துரிதமாக உயர்வடைந்து இவ்வாண்டின் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் ஏழு மரணங்களும் 300க்கும் மேற்பட்டோர் உறுதிப்படுத் தப்பட்ட நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். அதுவரை தடுப்பு நடவடிக்கைகள், நோய் பரவலினைத் தடுக்கும் முறையில் விழிப்புணர்வு வழிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் சுற்றுலாப் பயணிகளின் தொடர்ச்சியான வருகைகள், வைரஸினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து இலங்கையர்கள் நாடு திரும்பியமை போன்றன நோய் பரவலுக்கு தூண்டுதளித்தன. நம் நாட்டில் காவல்துறை ஊரடங்கு அமுல்படுத்துவதன் வாயிலாக மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள், 2020 மார்ச் 19 தொடக்கம் விமான நிலையங்கள் மூடப்பட்டமை மற்றும் வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் என்பன மூன்று மாதங்களின் பின்னர் பரவலை பெருமளவிற்கு கட்டுப்படுத்தின.


நாடு மீண்டும் திறக்கப்பட்டு மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கும் போதே கொரோனாவின் இரண்டாம் அலை மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலைக்கொத்தணியாக உருவெடுத்து பேலிய கொடை மீன் சந்தையாக பரிணமித்து இலங்கையின் பல மாவட்டங்களுக்கு பரவ தொடங்கியதன் மூலம் கொரோனாவின் இரண்டாம் அலை இலங்கையை ஆக்கிரமித்தது இதன் விளைவாக மீண்டும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது. தற்போதுவரை 15500 இதற்கும் மேற்பட்டோருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் நீங்கள் இந்த கட்டுரையை வாசிக்கும் போதும் இது மேலும் அதிகரிக்கலாம்.

## கொவிட் 19 காரணமாக உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்

உலகில் ஏற்பட்டுள்ள பெரும் முடங்கல் தாக்கத்தின் எதிரொலியானது 2007 - 08 காலத்தின் உலகளாவிய நிதி நெருக்கடியை கூட சிறிதுதொன்றாக காண்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் கொரோனா பெருந்தொற்றால் உலகப் பொருளாதாரம் 5.8 முதல் 8.8 ட்ரில்லியன் டாலர்கள் இழப்பினை சந்திக்கும் எனவும் ஒட்டுமொத்த உலக உற்பத்தியில் 6.4% முதல் 9.7% வரை பாதிக்கப்படும் எனவும் ஆசிய வளர்ச்சி வங்கி குறிப்பிட்டுள்ளது. இது இவ்வாறு இருக்க அவுஸ்திரேலியாவில் -7% ஆகவும் பிரேசிலில் - 9.7% ஆகவும் பிரித்தானியாவில் - 20% ஆகவும் பொருளாதாரம் வீழ்ச்சியானது பதிவாகியுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.


www.magazine.silampu.com
www.silampu.com

# கொவிட் –19 காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கங்கள்




இலங்கையில் பின்பற்றப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகள் நோய் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவியளித்தாலும் அது பொருளாதார ரீதியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு, பணவீக்கம், சென்மதி நிலுவை போன்றவற்றிலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த பொருட்கள் சேவைகளின் சந்தைப் பெறுமதி ஆகும். அந்த வகையில் இலங்கைக்கு அதிகம் வருவாயை ஈட்டித்தரும் துறைகளாக சுற்றுலாத்துறை, தேயிலை உற்பத்தி, மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிபவோர்கள், நிர்மாணத்துறை மற்றும் ஆடை உற்பத்தி என்பன காணப்படுகின்றன. தொடர்ச்சியான காவல்துறை ஊரடங்கு மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்பவற்றின் காரணமாகவும் விமான நிலையங்கள் மூடப்பட்டமையும் இவற்றின் வளர்ச்சியினை எதிர்மறையாக மாற்றியுள்ளது எனலாம்.

இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் அடிப்படையில் இலங்கையின் 2020 ஆண்டிற்கான ஏற்றுமதியானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது - 26.4% வீழ்ச்சியை கண்டுள்ளது. சுகாதார நலன் கருதி சுற்றுலாத் தளங்கள் மூடப்பட்டதனால் சுற்றுலா பயணிகளின் வருகையிலும் - 49.7% வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அத்துடன் தேயிலை ஏற்றுமதி - 14% ஆலும் நிர்மாணத்துறை -16% சதவீதத்தினாலும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. அதேபோல சமூக இடைவெளியை பேணுதல், வேலையாட்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல் போன்ற காரணங்களினால் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் உற்பத்தியானதுகணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் 2001 ம் ஆண்





www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

டிற்கு பிறகு - 1.6% என எதிர்க்கணியத்தை அடைந்துள்ளது.

மொத்த தேசிய உற்பத்தியைப் போலவே பொருளாதாரத்தில் பெரிதும் கவனம் செலுத் தப்படும் மற்றுமொரு மாறியே பணவீக்கம் ஆகும். அதாவது சந்தையில் விலைகள் சமநிலையில் காணப்படுவதனை குறித்து நிற்பதே பொது விலைமட்டமாகும். இந்த பொதுவிலை மட்டத்தின் தொடர்ச்சியானது கணிசமானதுமான அதிகரிப்பே பணவீக்கம் ஆகும். கொவிட் 19 காரணமாக பொருட் களின் உற்பத்தியானது குறைவடைவத னால் பொருட்களின் கேள்வி அதிகரித் துள்ளது. வெளிநாட்டு இறக்குமதி கணி சமான அளவு தடைப்பட்டதன் காரணமாக நிரம்பலாளர்கள் பொருட்களின் விலையை அதிகரித்து விற்க ஆரம்பிப்பார்கள். இதுவே பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப் பாகும். அதாவது உற்பத்தியின் இயலளவி லும் பார்க்க மொத்த கேள்வி அதிகரிப்பத னால் மிகைக் கேள்வி ஏற்பட்டு பண வீக்கம் ஏற்படும்.

மத்திய வங்கியின் தரவுகளின்படி செப்டம் பர் மாதமளவில் 6.20 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கமானது நவம்பர் மாத நடுப்பகுதி அளவில் 6.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரிக்கலாம். எனினும் ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கமானது 3% இதற்கு அதிகமாக காணப்படுமாயின் அது




பொருளாதாரத்திற்கு நல்லதல்ல என்பது பொருளியலாளர்களின் கருத்தாகும்.

கொவிட் 19 காரணமாக பலர் தமது வேலைகளை இழந்து நிர்க்கதியாகியுள் ளனர். அந்தவகையில் வேலையின்மை எனப்படுவது ஒரு பொருளாதாரத்தில் வேலை செய்ய தயாராகவும் வேலை செய்ய விருப் பத்தோடும் காணப்படும் ஒருவருக்கு வேலை யினை அந்த பொருளாதாரத்தினால் வழங்க முடியாத நிலையாகும். வகையில் தொடர் ஊரடங்கினால் பலர் தமது அன்றாட தொழிலினைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதேபோல வெளி நாடுகளில் தொழில் புரிவோரும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டதால் இது மேலும் அதி கரித்துள்ளது.

அந்த வகையில் கடந்த ஆண்டு 4.8% ஆக காணப்பட்ட வேலையின்மை வீதம் நடப்பாண்டில் 5.7% ஆக அதிகரித்தனை அவதானிக்கலாம். அதேபோல சென்மதி நிலுவையிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை கொவிட் 19 ஏற்படுத்தியுள்ளது.




www.silampu.com

சென்மதி நிலுவை என்பது சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை சமநிலையில் பேணுவதாகும். அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து இறக்குமதி செலவீனங்களை கழித்து பெறப்படுவதாகும். அந்த வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவானது -1.6 சதவீதமாக குறைவடைந்ததன் காரணமாக செலவீனங்களின் அளவானது மேலும் அதிகரித்துள்ளது. இதனால் இலங்கைப் பொருளாதாரத்தில் ஒரு தளம்பல் நிலை காணப்படுவதோடு கடந்த ஆண்டு - 7997 மில்லியன் அமெரிக்க டொலர் ஆக காணப்பட்ட சென்மதி நிலுவையானது இவ்வாண்டு மேலும் எதிர்க்கணியத்தை அடையும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இதிலிருந்து மீள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

கொவிட் 19 அனர்த்தமானது உலகளாவிய ரீதியில் பாரிய அளவு பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் இவற்றை தடுக்கவும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் எவ்வாறான நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமாயின்

சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதம் மீதான அழுத்தத்தை குறைப்பதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். அதோடு வெளிமுக முதலீட்டை இடைநிறுத்தலும் வர்த்தக வங்கிகள் மூலம் இலங்கையர் நாட்டிற்கான முறிகளைக் கொள்வனவு செய்வது மீதான தடை விதித்தல் என்பன ஊடாக மூலதன வெளிப்பாச்சலை தற்காலிகமாக கட்டுப்படுத்துதல். அதேபோன்று வெளிநாட்டு நலன்விரும்பிகளிடம் இருந்து வெளிநாட்டு நாணய வைப்புக்களின் உட்பாய்ச்சல் வசதியினை ஏற்படுத்துதல் வேண்டும். அதேபோல வர்த்தகர்கள்,விவசாயிகள், கைத்தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்குவதோடு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்தல் வேண்டும். அப்போது இலங்கையின் விவசாய உற்பத்தி அதிகரித்து அதன் ஊடாக உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு குறைவடைவதோடு உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கான செலவீனங்களை எம்மால் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் சிறு கைதொழிலாளர்களை ஊக்குவிக்கும் முகமாக குறைந்த வட்டி வீதமுடைய கடன்களை வழங்க வேண்டும். அத்துடன் தொழில் பாதுகாப்பினை ஏற்படுத்தி உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் எமது நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.

கொவிட் 19 இற்கான தடுப்பு மருந்து பயன்பாட்டுக்கு வந்து இந் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரையில் பொருளாதாரம் ஊர்ந்து செல்லும் வீதத்தில் இருந்தாலும் 1953ல் ஏற்பட்ட இறப்பர் அரிசி தட்டுப்பாடு, 1970களில் ஏற்பட்ட உலக எண்ணெய் நெருக்கடி, 2001இல் கட்டுநாயக்க விமான நிலையம் மீது இடம்பெற்ற தாக்குதல் மற்றும் ஏப்ரல் குண்டு தாக்குதல் போன்ற பொருளாதார நெருக்கடிகளில் இருந்து விடுபட்டு எமது நாடு “சுபீட்சத்தின் நோக்கு” என்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தின் படி அபிவிருத்தி அடையும் என்பது நிதர்சனம். அதற்காக பொறுப்புள்ள நாட்டு மக்களாகிய நாம் கொவிட் 19 என்ற நோயுடன் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அதற்காக அரசாங்கம் கூறும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் தனிமைப்படுத்துதல், ‘ஊசு பரிசோதனைக்காக அரசாங்கம் செலவிடும் பல மில்லியன் கணக்கான பணத்தை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும் எனவே நாமும் பொறுப்புள்ள இலங்கையராக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பணியில் கைகோர்ப்போமாக...

**ர.விதுர்ஷன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com




ஒரு பெரிய கோபுரத்தில் பல பல்லிகள் வசித்து வந்தன. ஒரு நாள் அவை ஒரு பந்தயம் நடத்தின.

யார் முதலில் கோபுரத்தின் உச்சியை அடைவது என்று போட்டி. நூற்றுக்கணக்கான பல்லிகள் மடமடவென்று ஏறத் தொடங்கின. கொஞ்ச தூரம் போனதுமே பல்லிகளுக்கு தெரிந்துவிட்டது. இது தங்கள் சக்திக்கு இயலாத காரியமென்று.

“முடியாது. முடியவே முடியாது” பல்லிகளில் ஒரு கூட்டம் பந்தயம் தொடங்கி சில நிமிடங்களுக்கு உள்ளாகவே விலகிக் கொண்டது.

இன்னும் கொஞ்ச தூரம் போனதும் மீதியிருந்த பல்லிகளில் கணிசமானவை விலகிக் கொண்டன. “உயரத்தை அடையும்போது நமக்கு உயிர் இருக்காது” என்று கத்தின.

ஒரே ஒரு பல்லி மட்டும் மூச்சைப் பிடித்துக்கொண்டு முன்னேறிக் கொண்டே இருந்தது. கீழே இருந்த பல்லிகள் எல்லாம் பெருங்குரல் எடுத்து கத்தின.

“தற்கொலை முயற்சியடா தறுதலை!”

எந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் மேலும் சில நிமிடங்களில் உச்சியை அடைந்தது அந்த குட்டிப் பல்லி. எல்லாப் பல்லிகளுக்கும் ஆச்சரியம். எப்படி இவனால் மட்டும் ஜெயிக்க முடிந்தது. அந்த குட்டிப் பல்லியின் அண்ணன் ரகசியத்தை போட்டு உடைத்தது.

“அவனுக்கு காது கேட்காது”.

நாமும் சில நேரங்களில் இப்படி தான் இருக்க வேண்டும்.வெற்றியை எட்ட நினைப்பவர்கள் எதையும் காதில் போட்டுக் கொள்ளக்கூடாது.

நம்மை சிதைக்க எப்பேர்ப்பட்ட மோசமான கருத்துக்கள் கூறப்பட்டாலும் நாம் எதையும் பொருட்படுத்தக் கூடாது. முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும்.

பொறுமையைவிட மேலான தவமுமில்லை.திருப்தியை விட மேலான இன்பமுமில்லை. இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை!

தோல்விகள் சூழ்ந்தாலும். இருளை விளக்கும் கதிரவன் போல அதனை நீக்கி அடுத்தடுத்த வெற்றி படியில் கால் அடி எடுத்து வையுங்கள். முடியும் வரை அல்ல, உங்கள் இலக்கினை அடையும் வரை.




www.silampu.com



# கால்பந்து உலகின் சரித்திரம் சரிந்தது

## மரடோனாவுக்கு உலகெங்குமிருந்து அனுதாபம் !

அர்ஜென்டினா கால்பந்து ஜாம்பவான் மரடோனா மாரடைப்பால் நேற்று மரணம் அடைந்தார். இதனால் கால்பந்து ரசிகர் கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

உலகம் முழுக்க கால்பந்து ரசிகர்கள் இவரின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்தி வருகி றார்கள். இவரின் மரணம் கால் பந்து உல கையே உலுக்கி உள்ளது.

### மரடோனா மறைவு

சில நாட்களாக இலங்கை - இந்திய மக் களை பயமுறுத்தி வந்த நிவர் புயல் கரையை கடந்தது. நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக பெருமளவில் சேதம் விளைவிக்காமல் கரையை கடந்து விட்டது.

இந்த நிவர் கரையை கடக்கும்போது இரவு 8 மணியளவில் சொல்லாமல் வந்த ஒரு சோக புயல் நம்மை தாக்கியது. கால்பந்து உலகின் ஜாம்பவான் டீகோ அர்மேண்டோ மரடோனா மறைவுதான் அது.

### வாழ்க்கை பயணம்

ஆம்… மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவு காரணமாக கடந்த வாரம் வைத்தியசா லையில் சத்திரசிகிச்சை செய்து கொண்ட அவர் நேற்று இரவு மாரடைப்பு காரணமாக இந்த உலகை விட்டு சென்றார். சாதனை மிக்க இந்த மனிதனின் வாழ்க்கை பய ணத்தை பற்றி பார்ப்போம். 1960-ஆம் ஆண்டு அர்ஜென்டினாவில் பியூனஸ்



அயர்சில் ஒக்டோபர் 30ஆம் திகதி பிறந்த மரடோனா வின் வாழ்க்கையில் முதலில் ஏழ்மைதான் விளையாடியது.

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com



## பந்து எடுத்து போடும் பணி

8 குழந்தைகள் கொண்ட அவரது குடும்பம் வறுமையில் வாட்டியது. இந்த வறுமைக்கு மத்தி யிலும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். சிறு வயது முதலே கால்பந்தின் மீது ஈர்ப்பு இருந்ததால் தனது 12 வயதில் பல்வேறு கால்பந்து டிவிஷன்களில் பேட்டி நடக்கும் இடங்களில் பந்து எடுத்து போடும் பணியை செய்தார்.

## முதல் அறிமுகம்

போட்டி இடைவேளை நேரங்களில் பந்தை வைத்து அவர் செய்யும் பாணி பார்வையாளர்களை கவர்ந்தது. தனது பதி னாறாவது வயதில் 1976 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி முதன் முதலாக கால்பந்து உலகில் கால் பதித்தார். அர்ஜெண்டினோஸ் ஜூனியர்ஸ் அணியுடன் முதல் அறிமுகத்தை தொடங்கினார்.

## தேசிய அணியில் இடம்

பதின்பருவ வயதிலேயே சக வீரர்களை விட தனித்துவமாக ஆடி அனைவரையும் கவர்ந்தார். அதன்பின்பு தனது திறமை யால் படிப்படியாக முன்னேறி 1997ல் தேசிய அணியில் இடம் பிடித்தார். 1982ஆம் ஆண்டு முதன்முதலாக உலககோப்பையில் தடம் பதித்தாலும் 1986ஆம் ஆண்டு நடந்த உலகக்கோப்பை கால்பந்து அவருக்கு மிக வும் மறக்க முடியாதது.

## உலகறிய செய்த ஆட்டம்

இந்த போட்டி முழுவதும் மரடோனா ஆதிக் கம் செலுத்தும் வீரராக வளம் வந்தார். ஒவ்வொரு ஆட்டத்திழும் தனது திறமையை நிரூபித்தார். இங்கிலாந்து அணிக்கு எதி ரான காலிறுதி ஆட்டத்தில்தான் இவரது திறமை உலகறிய செய்தது. அந்த போட்டி யில் 2 கோல்கள் அடித்து 2:1 என்ற கணக் கில் அணி வெற்றி பெற காரண கர்த்தாவாக விளங்கினார்.

## கோப்பையை வென்றது

பலம் வாய்ந்த அணிகளை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறிய அர்ஜென்டினா அணி பலமிக்க மேற்கு ஜெர்மனியை சந்தித்தது. அணியின் கேப்டனாக இருந்த மரடோனா வுக்கு கூடுதல் சுமை வந்து விழுந்தது. உலக ரசிகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மத்தி யில் நடந்த இந்த ஆட்டத்தில் அர்ஜென்டினா மேற்கு ஜெர்மனியை வீழ்த்தி மகுடம் சூடி யது.



## 4 உலக்கோப்பை

அர்ஜென்டினா கோப்பையை கைகளில் எந்த முக்கிய காரணமாக இருந்தவர் மர டோனா தான். இந்த தொடரில் இருந்து அர்ஜென்டினா மக்கள் மட்டுமின்றி, உலக மக்களின் மனதில் இடம் பிடித்தார். தேசிய அணியில் 1982, 1986, 1990, 1994உலக கோப்பையில் இடம் பெற்றுள்ளார். தனது மாயாஜால, நுணுக்கமான ஆட்டத்தால், பந்தை லாவகமாக கடத்தும் விதத்தில் அனை வரையும் கவர்ந்தவர். பிரேசில் கால்பந்து கடவுள் பீலேவுக்கு நிகராக மக்களால் போற்றப்பட்டவர் மரடோனா.

## 259 கோல்கள்

1977-1979 வரை அர்ஜென்டினா அணிக் காக 20 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டி யில் விளையாடும் போது 8 கோல் களை அடித்துள்ளார். சர்வதேச அணியில் 1997 முதல் 1994 வரை 91 ஆட்டத்தில் பங் கேற்று 34 கோல்களை அடித்து சாதித்

www.silampu.com



துள்ளார். இது தவிர நெப்போலி, பார்சி லோனா, செவில்லா உள்ளிட்ட பல்வேறு கிளப் அணிகளிலும் விளையாடியுள்ளார். 491கிளப் போட்டிகளில் விளையாடி 259 கோல்களை கம்பத்திற்குள் புகுத்தியுள்ளார்.

### சர்சைகளின் நாயகன்

தனது ஓய்விற்கு பிறகு பல்வேறு கிளப் அணிகளுக்கு பயிற்சியாளராக இருந் துள்ளார். கால் தேர்ந்த ஆட்டத்தால் மக்களின் நாயகனாக விளங்கிய விளங்கிய மரடோனா சர்சைகளின் நாயகனாகவும் விளங்கி னார். கால்பந்துக்கு அடிமையானதுபோல் போதை பழக்கத்தற்கும் அடிமையானார்.

### உயிர் பிழைத்தார்

போதைப்பொருள் பயன்படுத்தியதால் 1991-ல் நாப்போலி கிளப் அணியில் 15 மாதங்கள் நீக்கப்பட்டார். போதைபழக்கம் காரனமாக அவரால் பல்வேறு போட்டிகளில் விளையாட முடியவில்லை.போதைப்பழக்கம் காரணமாக 2000-ஆம் ஆண்டு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் மருத்துவமனையின் அவசர சிகிசையில் சிகிசை பெற்று உயிர் பிழைத்தார். போதைபொருள் தாக்கத்தை நன்கு உணர்ந்ததால் அதனை நிறுத்தி விட்டதாக 2007-ல் கூறினார்.

### இல்லற வாழ்க்கை கசப்பு

விளையாட்டைசிறப்பாக இருந்ததுபோல் போல் மரடோனாவின் இல்லற வாழ்க்கை யும் சிறப்பானதாக இல்லை. 1984-ல் கிளா டியா என்ற பெண்ணை திருமணம் செய்த அவர் கருத்து வேறுபாடு காரணமாக அவரை பிரிந்தார். பின்னர் வெரோனிகா என்பவரை 2-ஆவதாக மனம் முடித்தார். இவருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். பரபரப்புக்கு பஞ்ச மில்லாத மாரோடனா, வாங்கிய விருதுகளுக் கும் பஞ்சமில்லை. கிளப் தொடரிலும் சரி, சர்வதேச அளவிலும் சரி ஏராளமான விருது களை வாங்கி குவித்துள்ளார்.

### சுயசரிதை புத்தகம்

யோ சோய் எல் டீகோ, என்ற தனது சுய சரிதை புத்தகத்தை 2000 ஆம் ஆண்டு அவர் வெளியிட்டார், லண்டனின் தி டயம்ஸ் நாளிதழ் 2010 ஆம் ஆண்டு சிறந்த பத்து உலகக் கோப்பை கால்பந்து வீரர்களில் மரடோனாவை தேர்வு செய்து கவுரவித்தது. கால்பந்து விளையாட்டை பற்றி முழுமையாக அறிய முடியாதவர்கள் கூட, மரடோனாவை தெரிந்து வைத்திருப்பார்கள். அர்ஜென்டினா கால்பந்து அணியில் ஏன், உலக கால்பந்து அரங்கில் கோடி கட்டி பரந்த மரடோனா வின் இழப்பு கால்பந்து உலகுக்கு மட்டு மின்றி, உலக மக்கள் அனைவருக்கும் பெரிய இழப்பதுதான்.




www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com




தமிழ் சினிமாவில் பக்திப் படங்கள் வந்து நீண்ட காலமாகிவிட்டது. இந்தக் காலத்து பெண்கள் கூட பக்திப் படங்களைப் பார்த்து ரசிப்பார்களா என்பது சந்தேகம்தான்.

இருப்பினும், ஒரு பக்திப் படத்தை நகைச்சுவை கலந்து கொடுத்தால் இந்தக் காலத்திய அனைத்து ரசிகர்களும் ரசிப்பார்கள் என ஆர்ஜே பாலாஜி நினைத்திருக்கலாம். ஆனால், அதற்காக அவர் அதிகம் மெனக்கெடவில்லை. கொஞ்சம் நீட்டிக்கப்பட்ட யுடியுப் நகைச்சுவை நிகழ்ச்சி போன்றுதான் இந்தப் படத்தைக் கொடுத்திருக்கிறார்.

நாகர்கோவிலில் உள்ள லோக்கல் டிவி சேனலில் நிருபராகப் பணியாற்றுபவர் ஆர்ஜே பாலாஜி. அம்மா ஊர்வசி, மூன்று தங்கைகள், ஒரு தாத்தா. அப்பா சிறு வயதிலேயே வீட்டை விட்டு ஓடி விட்டதால் குடும்பச் சுமை அவர் தலை மீது இருக்கிறது. பார்க்கும் பெண்கள் எல்லாம் முதிர் கண்ணனாக இருக்கும் பாலாஜியின் குடும்ப சூழலைப் பார்த்து பிடிக்கவில்லை என்கிறார்கள். குலதெய்வமான மூக்குத்தி அம்மனை சென்று வழிபட்டால் விடிவு பிறக்கும் என்கிறார்கள். குடும்பமே குல தெய்வம் கோவிலுக்குச் சென்று வழிபடுகிறது - பாலாஜியின் வேண்டுதலுக்கு மனமிரங்கி மூக்குத்தி அம்மனே நேரில் வருகிறார். அந்தப் பகுதியில் உள்ள 11,000 ஏக்கர் நிலத்தை சாமியார் அஜய் கோஷ் தனதாக்கிக் கொள்ள திட்டமிடுகிறார். தங்கள் பகுதி நிலத்தைக் காக்க அம்மனும், நிருபரும் என்ன செய்கிறார்கள் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இதற்கு முன்பே ஆர்ஜே பாலாஜி கதாநாயகனாக நடித்த 'எல்கேஜி' படம் ஒரு அரசியல் கிண்டல் படமாக அமைந்து ஆரம்பம் முதல் கடைசி வரை நகைச்சுவை யுடனும், விறுவிறுப்புடனும் இருந்து ரசிக்க வைத்தது. ஆனால், இந்தப் படத்தில் அவை இரண்டுமே ஆங்காங்கேதான் இடம் பெற்றுள்ளன, அதுவே படத்தின் பெரிய குறையாகவும் அமைந்து விட்டது. படத்தின் கதைக்காக பெரிதாக யோசிக்கவில்லை. இடைவேளை வரை இருக்கும் கொஞ்சம் சுவாரசியம், இடைவேளைக்குப் பின் காணாமல் போய்விடுகிறது - டிவி பேட்டி அது இது என பல படங்களில் பார்த்ததை வைத்து ஒப்பேற்றி இருக்கிறார்கள் இயக்குனர் பாலாஜி மற்றும் சரவணன்.

பாலாஜி தனக்குப் பொருத்தமாக இருக்கும் அப்பாவி ஆண்மகன் கதாபாத்திரத்தை ஏற்று நடித் திருக்கிறார். பேச்சிலும், கிண்டலிலும் குறை வில்லை, ஆனால் அதில் காமெடிக்குத்தான் பஞ்சம் இருக்கிறது. போலி சாமியார் என்றால் வழக்கம் போல இந்து சாமியார்களை மட்டும்தான் சினிமாவில் கிண்டலடிக்கிறார்கள். இந்தப் படத்தில் தமிழ்நாட்டின் இரு பிரபலமான சாமியார்களை கிண்டலடித்துள்ளது போல் தெரிகிறது.

மூக்குத்தி அம்மனாக நயன்தாரா. தான் ஏற்று நடிக்கும் எந்தக் கதாபாத்திரமாக இருந்தாலும் அதில் தன்னைப் பொருத்திக் கொள்ளும் வித்தை அறிந்தவர் நயன்தாரா. இந்தப் படத்திலும் அப்படியே. அம்மனாக அவரை ஏற்றுக் கொள்ள முடிகிறது. கண்களிலும், முகத்திலும் ஒரு ஜொலிப்பு தெரிகிறது. படம் முழுவதும் அவர் வரவில்லை, கொஞ்சம் நீட்டிக்கப்பட்ட சிறப்புத் தோற்றம் போலத்தான் வந்து போகிறார்.

போலி சாமியாராக அஜய் கோஷ். இங்குள்ள சாமியார்களின் வீடியோக்களை அவரிடம் கொடுத்திருப்பார்கள் போலும், அதை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். இரு தினங்களுக்கு முன்பு 'சூரரைப் போற்று' படத்தில் ஊர்வசியின் சிறந்த நடிப்பைப் பார்த்தோம். இரண்டு நாள் இடைவெளியில் மற்றுமொரு சிறப்பான கதாபாத்திரம், சிறப்பான நடிப்பு. பாலாஜியின் தாத்தாவாக மௌலி, அதிக வேலையில்லை. தங்கைகளாக நடித்திருப்பவர்களும் தங்கள் கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

கிரிஷ் கோபாலகிருஷ்ணன் இசையில் எல்ஆர் ஈஸ்வரி பாடும் அம்மன் பாடல் மட்டுமே ரசிக்க வைத் துள்ளது. பின்னணி இசையில் சமாளித்துவிடுகிறார். நாகர்கோவிலின் இயற்கை அழகை கண்முன் கொண்டு வந்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் தினேஷ் கிருஷ்ணன். நயன்தாராவைப் படமாக்க ஸ்பெஷல் பில்டர் எல்லாம் போட்டிருப்பார் போலிருக்கிறது.

ஒரு வரிக்கதையாக இருந்தாலும், ஆழமில்லாத மேலோட்டமான திரைக்கதை பல இடங்களில் சுவாரசியத்தைக் குறைத்துவிடுகிறது. இன்னும் கொஞ்சம் 'ஹோம் ஒர்க்' செய்திருக்க வேண்டும்.

www.silampu.com

# "நான் முதல் பெண்மணியாக இருக்கலாம் ஆனால், கடைசியாக இருக்க மாட்டேன்"
## – கமலா ஹாரிஸ்



### அறிமுகம்

இன்று அனைவராலும், அனைத்து நாடுகளிலும், குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் பரவலாக பேசப்படும் ஒருவராக கமலா ஹாரிஸ் காணப்படுகிறார். அமெரிக்காவின் அதிபர் பதவிக்கான வேட்பாளரைத் தேர்வு செய்யும் ஜனநாயகக் கட்சியின் உட்கட்சிப் போட்டியில் களமிறங்கிய பிறகுதான், உலக அளவில் அனைவராலும் பேசப்பட்டார். இதன் பின்னரே இவர் மீது அதிக ஊடக வெளிச்சம் பாயத் தொடங்கியது. அந்தப் போட்டியில் வெல்ல முடியவில்லை என்றாலும், இப்போது ஜோ பைடனின் அதிபர் தேர்தல் வெற்றி மூலம் அமெரிக்காவின் துணை அதிபர் ஆகியுள்ளார் கமலா ஹாரிஸ்.

**முன்னதாக ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கான உள்கட்சி போட்டியில் கடுமையாக ஈடுபட்டு தோற்றவர்கமலா.**




தான் வெற்றி பெற்றால் கமலா ஹாரிஸ் துணை அதிபர் ஆக்கப்படுவார் என்று பைடன் அறிவித்தபோது, கமலா மீது இவ்வளவு கவனம் விழக் காரணம் அமெரிக்க துணை அதிபர் பதவியில் இதுவரை ஒரு பெண்ணோ, ஆபிரிக்க-அமெரிக்க வம்சாவளியினரோ, ஆசிய - அமெரிக்க வம்சாவளியினரோ இருந்ததில்லை என்பதால் ஆகும்.

**இதற்கு முன்பு இரண்டு முறை மட்டுமே பெண்கள், துணை அதிபர் பதவிக்கு போட்டியிட்டுள்ளனர். 2008ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் சார்பாக சாரா பாலினும், 1984ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஜெரால்டின் பெரொரோவும் போட்டியிட்டுள்ளனர்.**

முன்னதாக ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கான உள்கட்சி போட்டியில் கடுமையாக ஈடுபட்டு தோற்றவர் கமலா. இதையொட்டி கமலா ஹாரிஸிக்கும் குடியரசு கட்சி துணை அதிபர் வேட்பாளர் மைக் பென்ஸ்'க்கும் அக்டோபர் 7ஆம் திகதி விவாதம் நடைபெற்றது.

இதற்கு முன்பு இரண்டு முறை மட்டுமே பெண்கள், துணை அதிபர் பதவிக்கு போட்டியிட்டுள்ளனர். 2008ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் சார்பாக சாரா பாலினும், 1984ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஜெரால்டின் பெரொரோவும் போட்டியிட்டுள்ளனர்.

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com



ஆனால் இவர்கள் வெற்றி பெறவில்லை.

அமெரிக்காவின் இரு முக்கிய கட்சி களான குடியரசு கட்சி மற்றும் ஜனநாயக கட்சி இரண்டுமே அதிபர் வேட்பாளராக கறுப்பின பெண்ணை நிறுத்தியதில்லை. இதுவரை யாரும் அதிபராக இருந்ததும் இல்லை. ஆனால் இன்று அவ்வாறு நின்று தேர்தலில் வெற்றி பெற்று உள்ளார் என்பது அமெரிக்கா-வில் மீண்டும் ஜனநாயகம் புதுப்பொலிவுடன் புத்துயிர் பெறப்பட உள்ளது என்பதையே இந்த வெற்றி உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது.

கமலா ஹாரிஸ் **(Kamala Devi Harris)** 1964ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் திகதி பிறந்தார். அமெரிக்க அரசியல் வாதியும், வழக்கறிஞரும், அமெரிக்கத் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவார். மக்களாட்சிக் கட்சியின் உறுப்பினரான இவர், 2021 ஜனவரி 20 இல் துணைக் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்கவுள்ளார். இவரும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடனும் 2020 குடியரசுத் தலைவர் தேர்தலில் நடப்புத் தலைவர் டொனால்ட் டிரம்ப்பையும், துணைத் தலைவர் மைக் பென்சையும் தோற்கடித்தனர். கமலா ஹாரிஸ் 2017 முதல் கலிபோர்னியாவுக்கான மூதவை உறுப்பினராக இருந்தவர்.

இந்தியத் தமிழ் மற்றும் ஆசிய - ஆபிரிக்க - அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த கமலா பல்லின அமெரிக்கராவார். அமெரிக்க வரலாற்றில், கமலா ஹாரிஸ் முதலாவது ஆசிய - அமெரிக்க, முதலாவது ஆபிரிக்க - அமெரிக்க, மற்றும் முதலாவது பெண் துணைக் குடியரசுத் தலைவராக விளங்குகிறார். அத்துடன், இவர் அமெரிக்க வரலாற்றில், அதியுயர் பதவி ஒன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண்ணும் ஆவார்.

கலிபோர்னியாவின் ஆக்லாந்தில் பிறந்த கமலா ஹாரிஸ், ஹவார்ட் பல்கலைக்கழகத்திலும், கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் பயின்று சட்டத் துறையில் பட்டம் பெற்றார். இவர் தனது பணியை அலமேடா கவுண்டி மாவட்ட வழக்கறிஞர் அலுவலகத்தில் ஆரம்பித்து, பின்னர் சான் பிரான்சிஸ்கோ மாவட்ட, மற்றும் சான் பிரான்சிஸ்கோ நகர வழக்கறிஞர் அலுவலகத்திலும் பணியாற்றினார். 2003 இல், சான் பிரான்சிஸ்கோ மாவட்ட வழக்கறிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2010 இலும், பின்னர் 2014 இலும் கலிபோர்னியா மாநில தலைமை வழக்கறிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2016 அமெரிக்க மேலவைத் தேர்தலில் "லொரெட்டா சான்செசைத்" தோற்கடித்து கலிபோர்னியாவுக்கான மேலவை உறுப்பி

www.silampu.com

னரானார். இதன் மூலம், அமெரிக்க மேல வைக்குத் தெரிவான முதலாவது ஆப் பிரிக்க - அமெரிக்கப் பெண், மற்றும் முதலா வது தெற்காசிய - அமெரிக்கர் என்ற சிறப்பு களையும் பெற்றார். மேலவை உறுப் பின ராக, சுகாதார சீர்திருத்தம், கட்டுப்பாட்டுப் பொருட்கள் பட்டியலில் இருந்து கஞ் சாவை நீக்குதல், ஆவணமற்ற புலம் பயர்ந்தோருக்கான குடியுரிமைக்கான வழி வகைகள், தாக்குதல் ஆயுதங்களுக்கு தடை, மற்றும் வளர்விகித வரி சீர்திருத்தம் ஆகிய வற்றுக்கு ஆதரவளித்தார்.

இவர் பாலியல் வன்கொடுமைக் குற்றச் சாட்டு சுமத்தப்பட்ட பிரட் கவானா என்ப வரை அரசுத்தலைவர் டொனால்ட் ட்டி ரம்ப் இனால் உச்சநீதிமன்றத்தின் இணை நீதி பதி பதவிக்கு வேட்பாளராக அறிவிக்கப் பட்ட போது, அவருக்கு எதிராகக் குரல் கொ டுத்ததன் மூலம் கமலா ஹாரிஸ் நாடளவில் அறியப்பட்டவர்.

2020 குடியரசுத் தலைவர் தேர்த லில் போட்டியிடுவதற்கான மக்களாட்சிக் கட்சி யின் வேட்பாளராக கமலா போட்டியிட்டார், 2019 டிசம்பர் 3 இல் தொடர் நிதிப் பற்றாக் குறை காரணமாக தனது பிரச்சாரத்தை முடிப்பதற்கு முன்னர் கருத்துக்கணிப்பு களில் சில காலம் இவர் முன்னணியில் இருந் தார். 2020 ஆகஸ்ட் 11 அன்று 2020 தேர்த லில் ஜோ பைடன் உடன் துணைக் குடியரசுத் தலைவராக கமலா அறிவிக்கப்பட்டார். ஐரோப் பியரல்லாத வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்படுவது இது இரண்டாவது தடவை யாகும், முன்னதாக 1929 சார்லஸ் கேர்ட்டிஸ் துணைக் குடியரசுத் தலைவராக இருந்தார்.

## கமலா ஹாரிஸின் இளமைக்காலம்.

கமலா ஹாரிஸ்க்கு 55 வயதாகி-றது. கமலா ஹாரிஸின் தாய் இந்தியாவை சேர்ந்த வர், தந்தை ஜமைக்காவை சேர்ந்-தவர். கமலா ஹாரிஸின் தாய் தமிழகத்தைச் சேர்ந்த வர். அவரது உறவினர்கள் சென்னை



யில் வசிக்கிறார்கள். இவர்களின் பூர்வீகம் தமிழ்நாட்டின் திருவாரூரில் உள்ள துளசேந் திரபுரம். கமலா ஹாரிஸ் 1964 ஒக்டோபர் 20 இல், கலிபோர்னியா, ஒக்லாந்தில் பிறந் தார். தாயார் சியாமளா கோபாலன், ஓர் உயிரி யலாளர், மார்பகப் புற்றுநோய் மரபணு ஆய்வில் ஈடுபட்டவர். சியாமளா 1958இல் தனது 19வது அகவையில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஊட்டச்சத்து மற்றும் உட்சுரப்பியலில் பட்டப் படிப்புக்காக தமிழ் நாட்டில் இருந்து அமெரிக்கா வந்து, தனது முனைவர் பட்டத்தை 1964 இல் பெற்றார். கமலாவின் தந்தை டொனால்டு ஜே. ஹாரிஸ் யமேக்காவைச் சேர்ந்தவர். இவர் யமேக் காவில் இருந்து 1961 இல் அமெரிக்கா வந்து கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 1964இல் பொருளியலில் முனைவர் பட்டம் பெற்று, இஸ்டான் போர்ட் **(Stanford Uni versity)** பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

## கமலா ஹாரிஸின் தாயின் வளர்ப்பும், விடாமுயற்சியும்.

கமலா ஹாரிஸ் தன் அன்னை மீது அளவு கடந்த பாசம் கொண்டவர் என்பதை அவரது கருத்தின் மூலம் அறியலாம். இவரை இந்த அளவு உயர்த்தி அமெரிக்கா அழகு பார்க்க காரணம் அவரது தாயின் நம்பிக்கையும், அவரது உற்சாகமும் என்பதை உலகிற்கு வெளிக்காட்டினார். அமெரிக்க துணை அதி-பராகத் தேர்வாகி இருக்கும் கமலா ஹாரிஸ், கடந்த 10 ஆம் திகதி மே மாதம், 2020 அன்று, தன் இன்ஸ்டாகிராம் **(Instagram)** பக்கத்தில், தன் தாய் சியாமளாவின் படம் ஒன்றைப் பதிவு செய்து இருந்தார்.

www.magazine.silampu.com
www.silampu.com



அந்தப் பதிவில் "எல்லா விதமான தடைகளையும் உடைத்து எறிந்த ஒரு தாயின் மகள் நான். சியாமளா ஹாரிஸ் ஐந்து அடி உயரத்துக்கு மேல் இருக்கமாட்டார். ஆனால் எப்போதாவது அவரை சந்தித்து இருந்தால், அவர் ஏழு அடி உயரமானவர் என நீங்கள் நினைத்து இருப்பீர்கள். அவருக்கு அப்படி ஓர் உற்சாகமும், விடாமுயற்சியும் இருந்தது. அவர் என்னை வளர்த்ததற்கு நான் தினமும் நன்றி சொல்கிறேன்" என அன்னையர் தின வாழ்த்து சொல்லி இருந்தார் கமலா ஹாரிஸ். அந்த அளவுக்கு அவர் தாய் மீது நம்பிக்கை மற்றும் பாசம் உடையவர் என்பதை இப் பதிவு வெளிக்காட்டியுள்ளது.

1960ஆம் ஆண்டு உட்சுரப்பியியல் பிரிவில் முனைவர் பட்டம் பெறுவதற்கான கலிபோர்னியா பல்கலைக்கழகத்துக்கு வந்தார் ஷியாமளா. அங்குதான் டொனால்டு ஹாரிஸை சந்தித்தார். அதன் பிறகு திருமணமும் செய்து கொண்டார். இதன் பின் கமலாதேவி, மாயா எனும் பிள்ளைகளுக்கு தாயாராகின்றார். 1971ஆம் ஆண்டில், கமலா ஹாரிஸிக்கு ஏழு வயதாக இருக்கும் போது, டொனால்டு ஹாரிஸ் மற்றும் சியாமளா, விவாகரத்து பெற்றுக் கொண்டார்கள். விவாகரத்துக்குப் பிறகும், இவர்களது வாழ்கையில் டொனால்ட் ஹாரிஸ் தொடர்ந்து இருந்தார். இருப்பினும், தங்களின் வாழ்கையை வடிவமைத்ததில், பெரும் பகுதி, தன் தாய் சியாமளாவைத்தான் சேரும் என ஒரு கட்டத்தில் கூறி இருக்கிறார் கமலா ஹாரிஸ்.

கமலாவின் தாயார் சியாமளா இந்தியாவிற்கு செல்லும் போதெல்லாம் அவருடன் இந்தியாவிற்கு பயணம் செய்துள்ளார் கமலா ஹாரிஸ். மேலும் தனது இந்திய பாரம்பரியத்துடன் இணைந்தே வளர்ந்தார் கமலா ஹாரிஸ். இருப்பினும் தனது தாய் ஒக்லாந்தின் கறுப்பின கலாசாரத்திற்கு தன்னை மாற்றிக் கொண்டார் என்றும், தனது இரு மகள்களையும் அவ்வாறே வளர்த்தார் என்றும் ஒரு கட்டத்தில் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தனது சுய சரிதையில் குறிப்பிடுகையில்,

"எனது தாய் இரு கறுப்பின மகள்களை வளர்க்கிறோம் என்று புரிந்துகொண்டே எங்களை வளர்த்தார்." என தனது சுயசரிதையான "தி ட்ரூத்ஸ் வி ஹோல்ட்" புத்தகத்தில் கமலா குறிப்பிட்டுள்ளார். மேலும் "நாங்கள்



வாழச் சென்ற இடம் என்னையும் எனது சகோதரியையும் கறுப்பின பெண்களாகத் தான் பார்க்கும். எனவே நாங்கள் தன்னம்பிக்கைக் கொண்ட கறுப்பின பெண்களாக வளர்க்கப்பட வேண்டும் என்பதில் எனது தாய் உறுதியாக இருந்தார்," என கமலா குறிப் பிட்டிருந்தார். கமலா இந்தியாவில் தங்கியிருக்கும் போது அவருடைய தாத்தா தினமும் காலையில் நடைபயிற்சிக்கு செல்லும் போது கமலாவையும் அழைத்து செல்வாராம். அதுவே அவரை அமெரிக்காவில் மக்களின் உரிமைக்காகவே போராடுவதற்கான உந்து சக்தியை அளித்துள்ளது என்று ஒரு கட்டத்

www.magazine.silampu.com
www.silampu.com

தில் கமலா ஹாரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

## கமலா ஹாரிஸ் வாழ்க்கையில் துணைநிற்கும் கணவர்.



கமலா ஹாரிஸின் கணவர் டக்ளஸ் எம்ஹாப், தெற்கு கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில், கோட் சட்டப் புலத்தில் சட்டம் பயின்றவர். 1990 காலப்பகுதியின் இறுதி காலம் வரை, பல்வேறு சட்ட நிறுவனங்களில் பணியாற்றினார். 2000ஆம் ஆண்டில் சொந்தமாக சட்ட நிறுவனத்தை தொடங்கினார். 2006ஆம் ஆண்டு, இந்த நிறுவனத்தை வெனபிள் என்கிற நிறுவனம் வாங்கி தம்முடன் இணைத்துக்கொண்டது.

ஹாலிவுட் வீடியோ என்கிற நிறுவனத்துக்கும், பாக்ஸ் நிறுவனத்துக்கும் இடையிலான கணக்கு வழக்கு பிரச்சனையில், ஹாலிவுட் வீடியோ சார்பாக வாதாடினார். இதனால் பொழுதுபோக்கு தொடர்பான சட்ட விவகாரங்களில் இவருக்கென ஒரு பெயர் அமெரிக்காவில் கிடைத்தது. இந்த வழக்குக்குப் பின், பல தயாரிப்பு நிறுவனங்கள் சார்பாக க்ளாஸ் ஆக்சன் எனப்படும் வழக்குகளில் ஆஜரானார் எம்ஹாப்.

2017ஆம் ஆண்டுகளில் வெனபிள் நிறுவனத்தை விட்டு வெளியேறினார். டி.எல்.ஏ பைபர் என்கிற நிறுவனத்தில் கூட்டாளியாக சேர்ந்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். பொழுதுபோக்கு சார்ந்த வழக்குகள் மற்றும் அறிவுசார் சொத்து விவகாரங்களில் நிபுணராக இவர் அமெரிக்காவில் பிரசித்தி பெற்றுக் காணப்படுகிறார். அதேபோல் மனைவி மீது பாசமும், அன்பும் கொண்ட கணவராக இருக்கிறார் என்பதை கடந்த காலத்தில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் மூலமாக அறிய முடிகிறது. “என் மனைவியின் அரசியல் வேலைகள், என்னை மிகவும் கவர்கிறது. என் மனைவியின் தேர்தல் வேலைகளின் போது, என்னை நிறுத்தி, என்னோடு செல்பி எடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள்” என கடந்த ஆண்டு, ஹாலிவுட் ரிப்போர்டருக்குச் சொல்லி இருந்தார் டக்ளஸ் எம்ஹாப்”.

2019ஆம் ஆண்டு வாசிங்டன் போஸ்டுக்கு பேசிய அவர், “நிறத்தாலோ அல்லது பின்புலத்தாலோ ஒருவர் அரசியல் வாதியாக கூடாது. “நான் யாரோ அதில் சிறப் பாக உள்ளேன். உங்களுக்கு தெளிவு தேவைப்படலாம் ஆனால் நான் சிறப்பாக உள்ளேன்,” என தெரிவித்திருந்தார். துணை அதிபர் போட்டியில் கமலா வெற்றி பெற்றால் 2024ஆண்டுக்குள் அதிபர் போட்டியில் மீண்டும் பங்கு பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இன்றளவில் அவர் ஜனநாயகக் கட்சியில் எதிர்காலத்திற்கான ஒரு வலுவான சக்தியாக உள்ளார் என அமெரிக்கா செய்தி ஊடகங்கள் மற்றும் அரசியல் அறிஞர்களால் பரவலாக பேசப்படுகிறார்.

“நான் அவரையும், பல தலைமுறைகளாக இங்கு இருக்கும் பெண்கள் - கறுப்பினப் பெண்கள், ஆசியப் பெண்கள், லத்தின், பூர்வ குடி அமெரிக்க பெண்கள் என வரலாற்றில் இந்தத் தருணத்தை ஏற்படுத்த உழைத்த அனைத்து பெண்களையும் நினைத்துக் கொள்கிறேன்” என்று நன்றி தெரிவித்தார் கமலா ஹாரிஸ்.

## வெற்றியை ஆசிய மக்கள் கொண்டாட காரணம்

இன்று ஆசிய நாட்டில் குறிப்பாக இந்தியாவில் இந்த வெற்றியை மக்கள் கொண்டாடுகின்றனர். வாழ்த்துக்களை கூட அதிகமாக கூறியுள்ளார்கள். ஆயினும் கமலா ஹாரிஸின் வெற்றியை, அவர் ஓர் இந்தியர் என்ப

www.magazine.silampu.com


www.silampu.com

www.magazine.silampu.com



தற்காகவோ, தமிழ்நாட்டைச் சேர்ந்த வர் என்பதற்காகவோ கொண்டாடுவதை விட, ஒரு பெண்ணாக அவரின் வெற்றியைக் கொண்டாடுவதுதான் மிகவும் அவசியம்! இன்று இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அடக்குமுறைகளும் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும் நிலையில், கமலா ஹாரிஸ் என்ற பெண்ணின் வெற்றியைக் கொண்டாடுவதுடன் கூடவே, பெண்களுக்கு எதிரான சவால்களை உடைத்தெறிந்து முன்னேறிச் செல்லும் ஓர் ஊக்க சக்தியாக அவரைப் பார்ப்பதுதான் சரியான பார்வை என கூறுவது சரி. இந்த எண்ணத்தை விதைக்கும் வகையில்தான் அவரின் உரையும் இருந்தது. அவர் பின் வருமாறு கூறுகிறார்,




www.silampu.com

இந்தப் பதவிக்கு நான் முதல் பெண்மணியாக இருக்கலாம். ஆனால், கடைசியாக இருக்க மாட்டேன். ஏனென்றால், இந்த நிகழ்வைப் பார்க்கும் ஒவ்வொரு சிறுமியும், இந்த நாடு இதுபோன்ற வெற்றிகளுக்கான பல சாத்தியங்களைக் கொண்டது என்பதை உணர்வார்கள். நம் நாட்டின் அனைத்து குழந்தைகளுக்கும், அவரின் பாலினத்திற்கு அப்பாற்பட்டு, ஒரு தெளிவான செய்தியைக் கூற விரும்புகிறேன். லட்சியத்



துடன் கனவு காணுங்கள், உறுதியுடன் முன்னேறிச் செல்லுங்கள், மற்றவர்கள் உங்களைக் காண இயலாத இடத்தில் வைத்து உங்களைப் பாருங்கள். ஏனென்றால், அத்தகைய ஓர் இடத்தை மற்றவர்கள், முன்பு ஒருபோதும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால், அத்தகைய தருணம் வாய்க்கும்போதெல்லாம் நிச்சயம் கைதட்டுவார்கள்" என கமலா ஹாரிஸ் கூறுகின்றார்.

இந்த கூற்றுக்கு அமெரிக்காவில் வாழும் மக்களுக்கு மட்டும் அல்ல. உலகில் உள்ள சகல மக்களுக்கும் பொருந்த கூடிய பேச்சாகவே பார்க்க வேண்டும். இது குறித்து பலரும் தங்களது கருத்துக்களை முன்வைத்தும் பாராட்டியும் வருகின்றனர். அந்த வகையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கருத்துக்களை தெரிவித்து உள்ளார்.

உலகம் முழுவதிலும் உள்ள பெண்களுக்கு பெருமை தருகிறது என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள்

வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும் “மன்னர்கள் பைத்தியக்காரர்களாக மாறும் போது ஜனநாயகமும், அதன் செயற்பாடுகளுமே மக்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பாகும் ஜனநாயக நிறுவனங்கள் அவற்றின் சுதந்திரத்திற்கும், சட்டப்படியான அவற்றின் செயற்பாட்டிற்கும் வருகின்ற சகல அச்சுறுத்தல்களையும் கடுமையாக எதிர்த்து நின்று வெற்றி கொள்ள வேண்டும். அதை அமெரிக்க மக்களே உங்களால் நாம் பெருமை அடைகிறோம் என்று தனது ட்விட்டர் பதிவில் கூறியிருக்கின்றார். மேலும் பல நாட்டு ஜனாதிபதிகளும், பிரதமர்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச, பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் போன்றோர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

## கமலா ஹாரிஸின் அரசியல் பயணம்




கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக அமெரிக்க அரசியலில் இருக்கும் கமலா ஹாரிஸை, பலரும் பராக் ஒபாமாவின் பெண் வெர்சன் என்றே அழைப்பார்கள். தான் அளித்த பேட்டி ஒன்றில் இது குறித்து கமலா ஹாரிஸ், “என் வெற்றியையும் பலத்தையும் யாருடனும் ஒப்பிட விரும்பவில்லை. என் முந்தைய வெற்றியையும் செயலையும் கொண்டே என்னை அளக்க வேண்டும்” என்று அழுத்த மாகக் கூறினார்.

எனவே இந்தப் பண்பைத்தான் நாம் உணர்ந்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.


Mahinda Rajapaksa @PresR... · 5d
Congratulations to President elect @JoeBiden and VP elect @KamalaHarris on your victory. As we mark #72 years of diplomatic relations between our two countries, I look forward to working with both of you to further enhance #SriLanka -#USA relations to benefit both our peoples.


Gotabaya Rajapaksa @Gota... · 5d
The Government & the people of Sri Lanka join me in extending our warmest congratulations to President-elect @JoeBiden and Vice President-elect @KamalaHarris on this historic victory. We look forward to working together towards an even more robust, mutually rewarding partnership.

ஒரு பெண்ணின் திறமையையும் வெற்றியையும் அளக்க ஆணின் வெற்றி அளவு கோல்கள் இனியும் தேவை இல்லை. அதற்கு நம் வெற்றி - ஒரு பெண்ணின் வெற்றி தான் தேவை. அத்தகைய வெற்றியைத்தான் கமலா ஹாரிஸ் நமக்கு தந்திருக்கிறார்.

இரண்டு நூற்றாண்டு வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட அமெரிக்காவில் ஆபிரிக்க குடியேற்ற அடிமை விடயங்கள் வலி மிகுந்த பகுதியாகும். எனினும் அவ் வலிகளைக் கடந்து அமெரிக்கா ஜனநாயக ரீதியில் பல்வேறு மாற்றங்களை உருவாக்கி வருவதுடன், புதுமைகளை உருவாக்கவும் ஜோ பைடன் வெற்றி காரணமாகியது. இதனால் கமலா ஹாரிஸ் வெற்றி பெறுவதற்கான பின்னணியையும், சமகால அரசியல் தளமிட்டு கொடுத்துள்ளன. ஜனநாயகத்தின் மீதான பரந்துபட்ட பற்றையே 2020 அமெரிக்க தேர்தல் சுட்டிக் நிற்க்கின்றது.

வேறு ஒரு நாட்டில் குடி பெயர்ந்து, வேறு ஒரு இனத்தை சேர்ந்த ஒருவர் உப ஜனாதிபதியாக வருவது என்பது சுலபமான காரி யம் அல்ல. சமகாலத்தில் அமெரிக்காவின் மீது விமர்சனங்கள் பல இருந்தாலும், அதைத் தாண்டி இன்று ஜனநாயகம் புத்து

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com




யிர் பெற்று இருக்க காரணம் கமலா ஹாரிஸின் வெற்றியாகும்.

இதுகுறித்து ஆய்வாளர் இம்ரான் புர்க்கான் கருத்துப்படி “கமலா ஹாரிஸ் அடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் ஒரு முன்னணி வேட்பாளராக உருவாகலாம்” எனதனது கருத்தினை முன்வைத்துள்ளார்.

சிறுவயது முதலே மிகவும் தன்னம்பிக்கை மிக்கவராக கமலா ஹாரிஸ் காணப்பட்டார். அதுமட்டுமன்றி நெருக்கடிகள், சவால்களை எதிர்கொள்ளும் போது அவர் ஒருபோதும் தளர்ந்து விடவில்லை. ஒரு தைரியமான தலைமைத்துவ பண்பாளராக கமலா ஹாரிஸ் வலம் வருகிறார். அமெரிக்காவின் வரலாற்றை மாற்றி எழுதி இருக்கும் கமலா ஹாரிஸ், முக்கியமாக தெற்காசியாவில் தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பதாக காணப்படுகிறார். அரிசோனா பல்கலைக்கழக பேராசிரியர் சில்க் கொக் குறிப்பிடுவதன் படி “கமலா ஹாரிஸ் என்பவர் ஒரு சிறந்த தெரிவு அவர் ஒரு சிறந்த தலைமைத்துவ பண்பை கொண்டுள்ளதுடன் முக்கியமாக பெண்களுக்கான ஒரு தலைமைத்துவ முன்மாதிரியாக செயல்படும் ஆற்றலை கொண்டிருக்கிறார்” என்கிறார்.

இது அவருடைய ஆளுமைக்கு கிடைத்த பரிசாகும். காரணம் மக்களுடன் கூடுதலான ஈடுபாடு கொண்டவரும், மக்கள் மீது சிறந்த தெளிவும், புரிதலும் கொண்டவராவார். மேலும் அவருடைய கணவர் மற்றும் சகோதரி மாயா, தனது இரண்டு குழந்தைகள் என்பவர்கள் தனது பயணத்தில் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தார்கள் என கூறுகின்றார். அடுத்து 2024 தேர்தலில் முன்னிலை வேட்பாளராக களமிறங்க வாய்ப்பு இருக்கும் என இன்று சர்வதேச அளவில் பேசப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக உள்ள ஜோ பைடனுக்கு வரும் கைதட்டலை விட, கமலா ஹாரிஸ்க்கு வரும் கைதட்டல்களே அதிகமாக இருப்பதை ஊடகங்களில் காணலாம். இது அவரின் தொடர் வெற்றிக்கு காட்டும் அறிகுறி.

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோ மாகாண வழக்கறிஞர்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார். வழக்கறிஞராக பதவி வகித்த காலம் முதல்



www.silampu.com




மரணதண்டனைக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். கமலா ஹாரிஸ் 2015ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் செனட்சபைக்கு போட்டியிடுவதாக அறிவித்தார் இவரை கலிபோர்னியாவின் ஜனநாயக் கட்சி 2016 ஆம் ஆண்டு உறுப்பினர் பதவிக்காக அங்கீகரித்தது. இவர் சக ஜனநாயகக் கட்சி வேட்பாளரான லோரெட்டா சான்செஸிக்கு எதிராக போட்டியிட்டு வென்றார். செனட் உறுப்பினராக பதவி ஏற்றபின் ட்ரம்பின் பல்வேறு நடவடிக்கைகளை பொது வெளியில் விமர்சித்தார்.

கமலா ஹாரிஸ், ஜோ பைடன் துணை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அன்றே தனது தாய் வழிச் சமூகத்தை பற்றி தனக்கு தெரியும் என்றும் கூறினார். அமெரிக்க தேர்தலில் வெற்றியும் பெற்று, துணை ஜனாதிபதி ஆசனத்தில் அமரும் அவர், அமெரிக்காவின் இரண்டாவது குடிமகள் என்ற பட்டத்தையும் பெற்றிருப்பது மகி ழ்ச்சி ஆகும். அதைப்போல் ஜோ பைடனின் வெற்றியின் பின்னர் டொலாவர் பிராந்தியத்தில் தோன்றி மேடையில் அவர் உரையாற்றினார். அவர் குறிப்பிடுகையில் “நூறு ஆண்டுகளாக தமது உரிமைக்காக போராடிய பெண்களாலேயே நான் இந்த இடத்துக்கு வந்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது உரையில் ஜனநாயகம் என்பது ஒரு நிலை அல்ல. அது ஒரு செயற்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் தான் இறப்பதற்கு முன்னர் எழுதினார். அதன் பொருள் அமெரிக்க ஜனநாயகம் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒன்றல்ல என்பது ஆகும். மேலும் அவர் அதற்காக போராடுவதற்கான எமது விருப்பங்களின் அளவு மட்டுமே பலமாக இருக்கிறது. அதை நாம் வழங்கப்பட்ட ஒன்றாக எடுக்கக்கூடாது. நாம் எமது ஜனநாயகத்தை போராடிப் பாதுகாக்க வேண்டுமென கூறினார் இக்கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உலக ஜனநாயகத்தின் குரலாக ஓங்கி ஒலிக்கின்றன.

பெண்கள் தான் ஜனநாயகத்தின் முதுகெலும்பாகவும், அவர்களே நூறு ஆண்டுக்கு முன்னர் வாக்குரிமையை பாதுகாப்பதற்கான 19ஆம் திருத்தச் சட்டத்திற்காக போராடி உள்ளதாகவும், தற்போது 2020 ஆம் ஆண்டில் எமது நாட்டில் உள்ள புதிய தலைமுறை பெண்கள் தமது வாக்குகளை அளித்து அவர்களது வாக்களிப்பதற்கான அடிப்படை உரிமைக்காக போராடியதன் விளைவுதான் இங்கு நான் நிற்க காரணம் எனக் கூறினார்.

எனவே பல சவால்களை கடந்து வாழ்வில் நல்லதொரு இடத்திற்கு வந்த கமலாதேவி சமகால மற்றும் இனி வரும் சவால்களை வென்று உலகில் ஜனநாயகப் பாரம்பரியத்தை நிலைநாட்டும் அமெரிக்காவை, இனி வரும் காலங்களில் உலக நாட்டிற்கு ஒரு முன்னுதாரணமாக திகழச் செய்வார் என்பதில் ஐயமில்லை.

**கோ. புருசோர்தனா**
சட்டக் கற்கை (நான்காம் வருடம்)
பேராதனைப் பல்கலைக்கழகம்

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com



# கவிதை பூங்கா

## மன அழுத்தம்

சங்கரி
சிவகணேசன்

மன அழுத்தம்
அது ஒரு பெரும் போதை
அவரவர் விருப்பத்தோடு தான்
உச்சம் பெறுகின்றது...

அழுத்தும் அழுத்தங்களால்
தகிக்கும் உணர்வுகள் உருகி
உலர்ந்து போய் சிக்கிக் கொள்கிறது
மனதின் இடுக்குகளில்...

சிலந்தி வலையை விட
சில்கலான மன முடிச்சுக்களில்
சிக்கிக் கொள்ளும் தாக்கங்கள்
வெறும் மாயைகளே..

பெருங்கடலைப் போல்
கொந்தளிக்கும் மாய அலைகள்
கரைதாண்டினால் போதும்
மாய்த்துவிடுகிறது மனிதனை..

நம்முடைய மன எல்லையில்
நாமேதான் நிற்க வேண்டும்.
பிறகாரணிகள் நுழைந்தால் - நாம்
பாலை நிலத்தில்  நிழல் தேடும்
பறைவையென அலையக்கூடும்..

சில அழுத்தங்களால்
விழிக்கப் பழக வேண்டும்..
சில வருத்தங்களால்
ரௌத்திரம் பழக வேண்டும்..
சில விரிசல்களால்
இடைவெளி பழக வேண்டும்..

மொத்தத்தில்
நாமும் மனமும் அவ்வப்போது
சந்தித்துக் கொண்டால்
அழுத்தங்கள் திருத்தங்களாகக் கூடும்..
திருத்தங்கள் வருத்தங்களுக்கு
விடைகொடுத்தால் போதும்
ஆசிர்வதிக்க பட்டவர்களாகிவிடலாம்...

## தமிழை நிமிர்த்திய தலை

அண்ணாந்து பார்க்க வைத்த
அணு விஞ்ஞானி

ஆசனத்தில் அமர்ந்த குடியரசுத்
தலைவர் - நம்

இராமேஸ்வரம் தந்த ஆதித்
தமிழன் - தமிழன்னை



ஈன்றெடுத்த இளைஞர்களின் நண்பன்.

உன்னத மனிதர்கள் ஒரு சிலரில்
ஊருலகம் யாவும் போற்றிய தமிழன்
எதிலும் பின்னிடையாது கனவுகளை
ஏணிப்படிகளாய் சாதனை கண்டார்.

ஐயம் திரிபறக் கற்றறிந்து தன் கடமைகள்
ஒவ்வொன்றையும் நாட்டுக்காய் தந்து
ஓரணு பிளந்து சோதனை செய்து
ஔவைத்தமிழை நிமிர்த்திய தனயன்.

களங்கமில்லாப் பிரம்மச்சாரி
கற்றுத்தெளிந்த விஞ்ஞானி
பிறந்தது ஒரு சம்பவம்
மறைந்தது மகா சரித்திரம்

சிரபுரத்தான்
மண்டைதீவு

www.silampu.com

சென்ற இதழ் தொடர்ச்சி




# அவதூறு வழக்குகள் ஓர் பார்வை

*"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய்கவர்ந்தற்று"
- திருவள்ளுவர்*

மொஹொட்டிகே எதிர் குணத்திலக்க என்ற வழக்கில் இலங்கையின் மீயுயர் நீதிமன் றத் தில் தலைமை நீதிபதியாக கடமையாற்றிய கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா அவர்கள் "அரசாங்கத்துக்கு எதிராக நியாயமான மற்றும் அறிவுக்கேற்புடைய விமர்சனங்களை முன்வைக்கும் உரிமையை உள்ளடக்கியதே பேச்சு சுதந்திரம் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடு" என வரையறுத்தார். எனினும் இவ்வரையறையை எவ்வாறு சாமானிய மக்கள் புரிந்து கொள்வது?

இக்கேள்விக்கு பதிலளிக்கும் வண்ணமே கலாங்காலமாக நமது நீதிமன்றங்கள் சட்டத்தின் முன் ஒரு தனிநபர் இன்னொருவர் மீது அவதூறு வழக்கு பதிவு செய்வதற்கு ஏதுவான நான்கு அடிப்படை முக்கியத்துவம் உடைய காரணிகளை, வழக்கு முன் மாதிரிகளைக்கொண்டும் சட்டத்தின் போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியினை முன்வைத்தும் விருத்தியாக்கியுள்ளது.

அவையாவன,

1. வழக்கு தொடர்வதற்கு காரணமாக குறிப்பிடப்பட்ட கருத்து, தூக்ஷணை அல்லது பழிச்சொல்லாக அமைய வேண்டும்.

2. குறித்த அப் பழிச்சொல் வாதியை குறிப்பிடுவதாக அல்லது தொடர்புடையதாக காணப்படல் வேண்டும்

3. அவ் அவதூறான கூற்று பிரசுரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

4. பிரதிவாதியின் பால் **ANIMUS INJURIANDI** காணப்படுதல் வேண்டும்.

இதில் **'ANIMUS INJURIANDI'** என்ற லத்தின் சொல்லின் பயன்பாடு குறித்த வழக்கில் வசைச்சொல்லாக இனங்காணப்பட்டிருக்கும் கூற்றினை முன்வைத்த பிரதிவாதியின் மனோ நிலைமை அதனை முன்வைக்கும் பொழுது எவ்வாறாக காணப்பட்டது என நீதிமன்றத்துக்கு ஒப்பிக்கும் காரணியாக காணப்படும்.

எனவே இவ் நான்கு காரணிகளும் முழுமையாக, ஒன்றேனும் தவறாமல், பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் குறித்தவாதி சட்டத்தின் பார்வையில் அவதூறு வழக்கினை தொடர்வதற்கு ஏற்புடையவர் ஆவார்.

*முதலாவது அடிப்படை காரணி மீதான பார்வை...*

01. வழக்கு தொடர்வதற்கு காரணமாக குறிப்பிடப்பட்ட கருத்து தூஷணை / பழிச்சொல்லாக அமைய வேண்டும்.

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com



இதனால் குறிப்பிடப்படுவதாவது, அறிவுக்கு ஏற்புடைய விவேகமுள்ள பிரஜை ஒருவரின் பார்வைக்கு குறித்த அவதூறை சார்ந்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்ட கூற்றானது பொது மக்களிடையே குறித்த ஒரு நபரின் நன்மதிப்பைக் குன்றச் செய்யும் வகையிலான கருத்துக்களை உள்ளடக்கியதாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இது குறித்த வாதியின் தார்மீகத்தன்மையினை பிரதிப்பலிப்பதாக, அதாவது ஒழுக்கமின்மை, வஞ்சகத்தன்மை அல்லது வாதியினை ஏதேனும் ஒரு குற்றத்துடன் தொடர்புடையவராக அல்லது புரிந்தவராக சித்தரிக்கும் முகமாகவும் காணப்படலாம்.

இவ்வாறான கருத்துக்களை ஒப்பு நோக்கும் பொழுது பிரதிவாதியினால் பிரசுரிக்கப்பட்ட முழு ஆக்கத்தினையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதனடிப்படையில் நீதிமன்றங்கள் எவ்வாறான விடயங்களை மனதிற்கொண்டு குறித்த ஒரு நபரின் மீதோ அல்லது நிறுவனத்தின் மீதோ அவதூறோ அல்லது தேவையற்ற பரிகசிப்புக்களோ இடம்பெற்றுள்ளது என கணிக்கிறது என்பதனை பிரசித்தமான ஆங்கில வழக்கான டீ வில்லர்ஸ் எதிர் வேல்ஸ் இல் ஒரு தனிநபரை அநாவசியமாக பித்துப்பிடித்த வராக, முறைகேடாக பிறந்தவராக, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏதேனும் தொற்றும் தன்மையுடைய வியாதி உடைய வராக சித்தரித்து பிரசுரித்த அவதூறாக கொள்ளப்படும்.

அப்புகாமி எதிர் கிரிகாமி என்ற உள்நாட்டு வழக்கில் அநேகமானோர் குழுமியிருந்த இரவு நேர விருந்துபசார அறையொன்றில் பிரதிவாதி, வாதியின் மகள் ஒரு தாழ் குலத்து பிரஜையை விரும்பி வீட்டைவிட்டுச் சென்று மனம் புரிந்ததை காரணம் காட்டி தான் அவர் அருகில் அமர்ந்து விருந்துண்ணப் போவதில்லை என உரைத்தமை நீதிமன்றில் அவதூறாக கருத்தில் கொள்ளப்பட்டமை ஒரு சுவாரஸ்யமான சம்பவமாகும்.

ஆனால் பெர்னான்டோ எதிர் பெர்னான்டோ என்றஉள்நாட்டுவழக்கில்ஒருசாமான்யமான மொழி நடை அல்லது சம்பாஷணையின் போது பிரயோகிக்கப் படும் நாகரிகமற்ற வார்த்தைகள் அல்லது சபைக்குத் தாகாத சொற்கள் அவதூறாக கொள்ளப்படமாட்டாது என முடிவுரைக்கப்பட்டது.

அவதூறான மொழி நடையை ஒரு வழக்கில் சரியாக இனம் கண்டு கொள்வது நமது நீதிமன்றங்களுக்கு அவ்வளவு எளிதான காரிய மாக இருந்ததில்லை. காரணம் அது இரு வகையான தோற்றப்பாட்டை கொண்டிருக்கக் கூடியது.

- **முதல் தோற்றத்தில் அவதூறாக தெரி யக் கூடியவை :-**

இயல்பாகவே வெளிப்படையாக அக்கூற்று வசைச்சொல்லையுடையதாக இனங்காணக் கூடியதாக உள்ள வாக்கியங்கள்.

- **முதல் தோற்றத்தில் அவதூறாக தெரியாதவை :-**

இதை ஆங்கிலத்தில் ஐரெைநனெழ என்பார்கள், அதாவது இயல்பாகவே வெளிப்படையாக அக் கூற்று குற்றமற்றதாக காணப்படுகின்ற போதிலும் பின்புலத்தில் மறை முகமாக வசைச் சொல்லாக தாக்கக் கூடியதாக உள்ள வாக்கியங்கள்.

முதல் தோற்றத்தில் குற்றமற்றதாக காணப்படும் வசைக் கூற்றுக்களின் முக்கியத்துவத்தை விளக்கும் பொறுப்பை நீதிமன்றங்கள் அதை முன்வைக்கும் வாதியின் தோள்களிலேயே வைத்துள்ளது. எவ்வாறாயினும் அவர் அவதூறு என ஒப்பிக்க நினைக்

www.silampu.com

கும் கூற்று எவ்வாறான சந்தர்ப்பங்களின் அடிப் படையில் தூக்ஷணையாக கொள்ள முடியும் என்பதை ஆதாரங்களுடன் வெளிக் கொண்டு வரும் பொறுப்பு வாதிக்கு உண்டு. அக் குற்றமற்ற கூற்று குறிப்பிட்ட விதத்தில் ஏனைய நிகழ்வு ஆதாரங்களுடன் உற்று நோக்குகையில் அவதூறே என நீதி மன் றங்கள் திருப்தி அடையும் வகையில் நிரூபண மாகவேண்டும்.

ஏனெனில் பொய்யான கூற்றுகளுக்கு சட்டத்தில் இடம் இல்லை. அத்தோடு அவ்வா றான வழக்கை தொடர முற்பட்டமை நீதி மன்றத்தை அவமதித்ததாகவும் கொள்ளப் படும்.

02. குறித்த அப் பழிச்சொல் வாதியை குறிப்பிடுவதாக அல்லது தொடர்புடையதாக காணப்படுதல் வேண்டும்.

வழக்கிற்கு அடிப்படையாக முன்வைக் கும் கூற்றினில் வாதி குற்றம்சாட்டப்பட்டவ ராக அல்லது இழிவுக்குட்படுத்தப்பட்டவராக இனங்கண்டுகொள்ளுதல் மிக முக்கியமா கும்.

நீதிமன்றம் இதை அறிய பயன்படுத்தும் சோதனை ஒரு சாமன்ய அறிவுள்ள மனிதன் அக் கூற்றை வாசிக்கும் பொழுதோ அல்லது கேட்கும் பொழுதோ குறித்த கூற்று வாதியை இழிவுபடுத்துவதாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

சில வேளைகளில் பிரதிவாதி புனைகதை கள் வடிவில் அல்லது நாவல்கள் வடிவில் கூட ஒரு கற்பனை கதாபாத்திரம் வாயிலாக இவ்வாறான அவதூறை வெளிக்கொண்டு வர முற்படலாம்.

ஹல்டன் எதிர் ஜோன்ஸ் என்ற ஆங் கில வழக்கில் ஓர் வழகுரைஞர், அவருடை பெயரையுடைய ஒரு தேவாலய பாதுகாவ லரை பற்றிய ஓர் கற்பனைக்கதை எழுதிய பத்திரிகையின் மீது அவதூறு வழக்கு தொடர்ந் தார். இவ் வழக்கை தீர்மானிக்கும் பொழுது நீதிமன்றம் அச் சமூகத்தினர் அக்க தையை வாசிக்கும் பொழுது பிரசித்தமான இவ் வழக்குரைஞரை அது குறிப்பதாக கருத் தில் கொள்ள முடியுமாக இருப்பதால் இவ் வழக்கு வாதிக்கு சாதகமாக முடிவுற்றது. இவ்விடத்தில் பிரதிவாதியின் நோக்கம் குற்றமற்றதா இல்லையா என்பது விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரசித்தமான உள்நாட்டு வழக்கான வெலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க எதிர் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இவ் வழக்கில் “எமது நாட்டு வேலை” **(Ape Rate Wada)** என்ற சிங்களத்திரைப்படத்தை காட்சிப்ப டுத்துவதற்கு எதிராக நிரந்தரத்தடையுத்தரவு இடுமாறு கோரப்பட்டது. காரணம், அப்படத் தில் எதிர்மறை கதாப்பாத்திரமாக சித்தரிக் கப்பட்ட அதிவேக பாதைகளின் அமைச்சர் கதாப்பாத்திரம் தன்னைக் குறிப்பது போல் அதை பார்க்கப்போகும் பொதுமக்களுக்கு அமையலாம் என வாதியாகிய அமைச்சர் கருதியமையாகும். இதில் அக் கதாப்பாத்திரம் தன் அரசியல் அதிகாரத்தை ஊழலான முறை யில் உபயோகிப்பது போல் காட்சியமைக்கப் பட்டிருக்கும். ஆகவே அது தம் அரசியல் வாழ்க்கைக்கும் தம் நன்மதிப்பிற்கும் பங்கம் விளைவிப்பதாக அவர் கருதினார்.

ஆனாலும் இவ் வழக்கில் வாதி எவ்வாறு ஒரு குறித்த கூற்றினை சுட்டிக்காட்டி அது பழிச் சொல் என குற்றம் சுமத்த முற்படுகிறாரோ அவ்வாறே பிரதிவாதிக்கும் தனது நோக்கும் வாதியை இழிவுபடுத்தும் முகமாக அமைய வில்லை என்பதனை சட்டத்தின் முன் விளக்க இடமளிக்கப்பட வேண்டும். எனத் தீர்ப்பளித்து தடையுத்தரவு மனு நிராகரிக்கப் பட்டது.

*இவ்வழக்குகள் அடுத்த இதழில் மீளழைக்கப்படும்.*

செல்வி. **அஸ்வினி பிரபாகரன் ரவி**
*இறுதியாண்டு மாணவி*
*இலங்கைச் சட்டக் கல்லூரி*

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com




www.silampu.com

இவ் இதழானது 2020.11.27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, கார்த்திகை - 2020 ற்கான “சிலம்பு” பல்சுவை இணைய இதழாக அருள்ஒளி கிரியேசன்ஸ் பிறைவேட் லிமிரெட் நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது.